6 No. 35 7 Sep 1933

JL
M211, M128 KN
M33.6.35
189159

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஹு செப்டம்பர் மீ 7உ [No. 35

1? JAN 1934

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 645
2. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை 647
3. மானத சாத்திரம் (Psychology)—குறிப்பு
வித்வான் T.P. மீனாக்ஷிசுந்தரம், M.A.B.L. 649
4. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 651
5. அமீல் (Henri Frederic Amiel)
T. R. இராஜகோபால் 653
6. கலித்தொகை (பாலைக்கலி, 24)
T. A. கனகசபாபதி முதலியார் 643
7. காற்றுமழை (அங்கம் 4. களம் 1.)
Shakespeare's Tempest 655
8. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 657
9. பொதிகை நிகண்டு (வகரம்)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 659

கலாநிலயம்

139159

அறிந்து பெற்ற அறியாமை.

"பொதுவுறப் பேசுமிடத்து நம்மிலே ஒருவரும் இன்று முழுமனிதர் இல்லை. மனிதச் சிதைவுகளே நாம்; உடைந்து சிதறிய மாநிட ஓடுகளாகக் கிடக்கின்றோம். ஒப்பிற்கு நடமாடிச் செய்ததைச் செய்கின்ற வீணர்; ஆன்மாக்கள் அல்லர் நாம், மாநுட எந்திரங்களே. ஆதலாற்றான், அழகேனும், ஆழமேனும், ஆற்றலேனும் இல்லாமல் நமது உயிர்வாழ்க்கை கழிகின்றது... ...நமக்கு வேண்டியது காட்சிச்செம்மையே யன்றிச் செய்கைத் திறமையன்று, உணர்வின் தூய்மையே யன்றிப் புத்தியின் கூர்மையன்று. நிரந்தர மெய்ம்மையோடு நெருங்கிய உறவுகொண்டதோர் வாழ்க்கையே வேண்டப்படும்," என்று, ஆந்திர சர்வகலாசாலையின் வைஸ் சான்ஸலராயிருக்கும் ஸர் இராதாகிருஷ்ணன் சில ஆண்டுகளுக்குமுன் இங்கிலாந்தில் நிகழ்த்திய வோர் உபந்நியாசத்தினிடையே எடுத்தோதினர். இத்தகைய வாசகங்கள் இக்காலம் எல்லோர் செவியிலும் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருந்தால் உலகம் நல்வழிப்படும்.

உணர்வென்பது சிறிதேனும் இல்லாதவர்தாம், அறிவினைப் பாராட்டிப்பேசுவார். தலைக்குத்தலை உலகத்தைச் சீர்திருத்துகின்ற தலைவர்கள் தோன்றித்தோன்றி மிக உழக்கும் இந்நாள், மக்களுக்கு இயற்கையாக உள்ள நல்லுணர்வு காக்கப்பெறுதல் மிகவும் அருமையாகிவிடுகின்றது. "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர்வு இல்லாதவர்க்கு" என்பதன் பொருள்கிடக்க அக்குறள்தானும் ஒன்று உளதென்ற செய்தியுந் தெரியாத தன்மையர் எண்ணிறந்தோர் நம் தமிழ்நாட்டுத் தலைவர்களிடையே காணப்படுகின்ற பரிபவம் மிகப் பெரிது. மெய்யுணர்வு இன்மையோ கொடிது, உணர்வழிய அறிவுகூறுதல் மிகக் கொடிது, பேதைமையையே அந்த அறிவென்று வற்புறுத்திக் கூறுதல் அதனினுங் கொடிது. இக் கொடுமையைச் செய்துவைக்க முயல்வோர் சிலர், "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னுந்திருக்குறளை வாய்க்குவாய் எடுத்துக்காட்டுகின்ற வழக்கமுடையவர்களா யிருக்கின்றார். பொருள்களின் தோற்றத்தை மட்டுங் கருதுமளவில் அவை வேறுபடும் இயல்புடையனபோற் காணப்பட்டாலும், அவையனைத்தும் அந்தத்தில் நிரந்தரமாகியவொரு மெய்ப்பொருளே ஆகுந்தன்மையைக் காண்பதே அறிவெனப்படும், என்னுங்கருத்தை இக்குறள் கொண்டிருக்க, அதனைவிட்டு, அறிவெனும் எதனையோ ஒன்றைக்கொண்டு, காண்பனவற்றையெல்லாம் வேறுவேறு என்று பிரித்து அப் பிரிவிற்கு ஏற்றபடி இகல்கொள்வதே கடனென்னும்படி அவர் கருத்து நிகழ்கின்றது. வேற்றுமையற்றதோர் நிரந்தரநிலையே மெய்ம்மை; எல்லாத் துறைகளிலும் அம்மெய்ம்மையை நாடுவது நம் உணர்வு. நாடும் அந்நாட்டத்திற்கு இலக்காயிருக்கின்ற மெய்ம்மையைக்காட்டித்தருவது அறிவு. எனின், மெய்யறிவை உணர்வின் தொடர்ந்த முதிர்ச்சியென்று கொள்ளவேண்டுமேயன்றி அவ்வுணர்வினின்று வேறாய தொன்றெனக் கருதலாகாது. நம் பிறப்போடு வந்த உள்ளுணர்வு வளர்ந்துவளர்ந்து பதியதோர் உயரத்தை எய்துதல்வேண்டும். எண்ணங்

களுக்கு உருவமும் கண்ணிற்கு நிறங்களுந் தென்படுவதுபோல், மேனிலை எய்திய உணர்விற்கு மேம்படு மெய்ம்மை தானே விளங்கப்பெறும். இன்னவாறு விளங்கும்போது, அறிவு அறியாமை என்னும் அவ்விரண்டு நிலைகளும் ஒன்றேயாகி முடிந்து, கோடிகள் கூடிவிடும் என்னும் வழக்கிற்கிணங்க, 'அறிதோறும் அறியாமை கண்டற்று' என்ற வள்ளுவர் வாய்மையில் வந்தடங்கக் காணலாம்.

எனினும், அறியாமல் இயக்கும் இவ் வுள்ளுணர்வின் இயற்கைநிலையோடு ஆன்மவாழ்க்கையை மயங்கலாகாது. கீழ்நிலையில் உள்ள உயிர்களும், குழந்தைகளும் ஆன்மஅறிவின் ஆற்றல் இன்றி, உள்ளுணர்வின் இயற்கையாகிய இயக்கங்களையே ஆதாரமாகப் பற்றி வாழ்வன. சின்னஞ்சிறு குழந்தைகளைப்போல் நாம் ஆனாலன்றி மோக்ஷசாம்ராஜ்யத்தை அடைவதற்குச் சற்றேனும் ஏற்றவர்கள் ஆகமாட்டோம் என்று கிஸ்தவவேதம்மாத்திரம் அல்லாமல்எல்லாமதங்களுமே எடுத்துக் கூறுவது உண்மையே. எனினும், மெய்ம்மையைத் தழுவிய உள்ளுணர்வும், செய்கையின்பாற்றாண்டும் இயற்கைத்தூண்டல்களும் ஒன்றேயென மதித்தலாகாது. இவை இரண்டிற்கும் பொதுத்தன்மைகள் சில இருப்பினும் வேறு வேறாய வழிகளைபற்றித் தொடர்வனவாம் இவை. இதனைச் சார்ந்து ஸர். இராதாகிருஷ்ணன் அரிய இரகசியங்கள் சில செப்பி இருக்கின்றார்—

Spiritual life is not to be confused with the instinctive or the unconscious. It is true that religious teachers tell us that we cannot enter the kingdom unless we become as little children. Those who speak of intuition refer to certain qualities which it shares in common with instinct such as directness, spontaneity and a closer contact with life. Instinct is the source of vitality and the bond that unites the individual with the race. The feeling of being one with the world is the reflection in consciousness of that instinctive unity which is the foundation of our conscious life. In the lower stages of evolution, our way to knowledge is through instinct. Primitive man had marvellous knowledge of the ways of nature which we do not possess. Animals know instinctively what we acquire after laborious reasoning. When we are in nature's embrace, our lives are simple and certain. But the scope of instinct as unconscious is limited. While the beings guided by instinct act with unhesitating precision, they are helpless in unfamiliar surroundings. For they act without knowing why they do so. They cannot express themselves. Besides, the unconscious unity of life which made instinctive knowledge possible is sundered by the rise of intellect which helps us to know ourselves and control the forces of nature. Since the primeval unity is broken, man is uncertain and wavering. We seem to be alienated from nature, leading sceptical, artificial and self-centred lives. If intellect is to be brought closer to life, it must combine with instinctive knowledge. Such a combination is what we possess in intuition. It has the directness and unity of instinctive knowledge as well as consciousness of the intellectual. It is not confused irrationalism or irresponsible mysticism.

When the prophets refer to the virgin outlook of a child, they have in view the second innocence which comes after knowledge and not the first which precedes it. The spontaneity of the child is not a substitute for insight. The spirit which is the unconscious beginning must become the conscious ending of our life. Children enjoy an innocence, a sincerity, an integrity, born of harmony between themselves and their lives. They live in peace; they tell no lies; they do no wrong. They surrender themselves to spontaneity. Their behaviour is a perfect expression of their being. Our intellectual consciousness has driven us out of that wholeness of being. To regain that integrity, to attain to a life where knowledge and being are not divorced from each other is the essence of human evolution. To recover the lost unity is to be reborn. It is the secret of spiritual life, the mystery of the kingdom of God.

இதன்படி, அறியாமை இருவகைத்து. இயற்கைத் தூண்டல்களுக்கே இயன்றபடி இயங்கும் நிலையில் நிற்கவைக்கும் அறியாமை யொன்று; மெய்யுணர்வு எய்துதற்குவேண்டிய அறிவைப் பெற்று ஆன்மநிலை எய்தி, அதன்பின், அவ்வுணர்வினிற்கு நம்முடையவாழ்க்கையை ஒம்படைசெய்துவிட்டு, பிறிதொன்றும் அறியவேண்டாமை மற்றொன்று. யாதுவரினும் இதுவே சலிக்காமல் எதிர்நிற்கவல்ல நிலைபேறுடையது. அறிதற்குமுன் இருந்த அறியாமைக்கும் அறிந்ததற்குப் பின் வந்த அறியாமைக்கும் உள்ள இவ் வேற்றுமை மிகவும் நுட்பமாவதுடன், அதனைத் தெளிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமுமாகும். அறிதோறும் அறியாமைகண்டற்று, என்ற வள்ளுவர் தம் வாக்கில் இவ்வுண்மையும் அடங்கியிருத்தலை எத்துணைமுறை வற்புறுத்தினலும் மிகையாகாது. யாதொன்றும் அறியாமல் மனிதர் இயற்கைக் கிணங்கியே நலமுற இயங்கலாமாயினும், அது புதிய நிலைகள் வந்துற்றப்போது கையற்றுச் சலித்துவிடும்*. அறிந்தபின் புதிது புகுகின்ற அவ்வறியாமை போன்றவோர் ஆன்மநிலையோ அசைவற்றது. அசைவற்றதாயினும் யாதும் அறியவேண்டா இவ்வான்மநிலை ஆற்றலென்பதற்றுத் தேங்கிக்கிடக்குந் தன்மைத்தன்று. இவ்வறியாமையின் ஆழத்தில் ஒளியுடைய விடுதலையும் ஆற்றலுடைய அமைதியும் அமர்ந்திருக்கின்றன.

உணர்வைக் கெடுத்துக்கொள்வதற்குமட்டும் வேண்டிய அறிவை எய்துதற்கு இந்நாள் நிகழ்த்தப்படுகின்ற முறைகள் பற்பல. இதனால் உணர்விற்கு இயற்கையாகிய நன்மையும் கெட்டு, அறிவினால் வரவேண்டிய ஆன்மநிலையும் அடையாமல், ஸர். இராதாகிருஷ்ணன் சொல்லிய வண்ணம், உடைந்து சிதறிய மாநுட ஓடுகளாகவே கிடக்கின்றோம். இவ்வறிவை மீண்டும், அத் திப்பிய அறியாமை யாக்கும்படி அவ்வுணர்வினோடு இணைத்துத்தரும் உதவி செய்யவல்லவை கலைகளேயாதலின், அக் கலைகளின்மாட்டுக் கருத்தைச்செலுத்தும்படி வேண்டுகின்றது நம் கலாநிலயம்.

*[இந்த நுண்மையைக் கம்பர், கைகேசி கோசலை ஆகிய இவ்விருவர் திறத்தில் பிரித்துக்காட்டுமோர்நினைவினோடு, கைகேசி, முதலில் தன் உள்ளத்துணர்வினால், புதல்வர் தம்முள், "வேற்றுமை உற்றிலள்" என்றும், அறிவினது ஆற்றல் சான்ற கோசலையோ "வேற்றுமை மாற்றினாள்" என்றும் வேறுபடுத்தி, அதற்கியன்றவாறு கைகேசியினது தூயசிந்தைமிகவிரைவில்திரியலாயதையும், கோசலைமாறு மனத்தன்பு உடையளாயதையும் காட்டியிருக்கின்ற கொள்கை இவ்விதழ்களில் வரும் கம்பராமாயணக் கட்டுரைகளில் விளக்கப்பெற்றிருக்கின்றது. (3-வது வால்யூம் 514-வது பக்கம்.]

தமிழ்ப்பாடம் 85.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை

[637-வது பக்கத் தொடர்ச்சி]

ஆடு மரவிற் றுயிலரங் கேச னருமகற்கா
நீடுந் தறியி லுதித்தில னேனி கிலப்பொருள்க
ளூடும் புறத்தினு முண்மையெவ் வாறிவ் வுலகறியு
மீடு மெடுப்புமில் லாவொரு தெய்வ மிவனெனவே.

பதப்பிரிவு:—ஆடும் அரவில் துயில் அரங்கம் ஈசன் அரு மகற்கு ஆ(க) நீடும் தறியில் உதித்து இலன் ஏல் நிகிலம் பொருள்கள் ஊடும் புறத்தினும் உண்மை எவ் ஆறு இ உலகு அறியும் ஈடும் எடுப்பும் இல்லா ஒரு தெய்வம் இவன் என ஏ.

பதவுரை.

ஆடும்-ஆடுகின்ற, அரவில்- பாம்பின்மேல், துயில்-கண்வளர்கின்ற, அரங்க ஈசன்- ஸ்ரீரங்கநாதன், அரு-அருமையான, மகற்கு ஆ - மகனாகிய பிரகலாதனுக்காக, நீடும் - நீண்ட, தறியில் - தூணில், உதித்து இலன் ஏல்-நரஸிம்மமாகத் தோன்றியிரானாகில், ஈடும்-தனக்குச் சமானமும், எடுப்பும்-உயர்வும், இல்லா-வேறு இல்லாத, ஒரு - ஒன்றான, தெய்வம்-கடவுள், இவன் எனவே-இவனே என்று, நிகிலம் பொருள்கள்-எல்லாப் பொருள்களின், ஊடும் - உள்ளிடத்திலும், புறத்தும் - வெளிப்புறத்திலும், உண்மை - (அவனிருக்கின்ற) உண்மையை, இ உலகம்-இவ்வுலகத்தவர், எவ்ஆறு - எந்த விதத்தில், அறியும் - அறியக்கூடும்.

கருத்து:—இரணியன் புடைத்த அந்தத் தூணினிலிருந்தே தோன்றியதினின்று "எங்கு மயமான பொருள் எங்கள் ஸ்ரீரங்கநாதன்" என்ற அவ்வுண்மை ஸ்தாபிக்கப்பட்டதென்பது இச்செய்யுளின்கருத்து.

குறிப்பு:—நிலைமொழியீற்றுமெய் வருமொழி முதலில் உள்ள உயிரோடு புணர்கின்ற இலக்கண விதிகளுக்கு உதாரணங்கள் இச் செய்யுளில் நிறைந்திருக்கின்றன:—ஆடும் = அரவு + ஆடுமரவு, நிலைமொழியீற்றிலிருப்பது மகரமெய்யானாலும், இது பெயரெச்சத் தொடராதலால், அம்மெய் கெடாமல் உயிரை ஏற்றது. அரங்கம் + ஈசன் = அரங்க ஈசன், அரங்கத்தில் உள்ள ஈசன் என, ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகையால் மகரம் கெட்டது; இது அரங்கேசன், என ஆனது வடமொழிச் சந்தி, அதைப் பின்னர்க்கற்போம். துயில் + அரங்கன் = துயில்ரங்கன். தறியில் + உதித்து = தறியிலுதித்து, இலன் + ஏல் = இலனேல். பொருள்கள் + ஊடும் = பொருள்களூடம். புறத்தின் + உம் = புறத்தினும்—இவையெலாம் பொதுவிதியின்படி இயல்புப்புணர்ச்சியாயின. உம் + உண்மை = உமுண்மை; உம் என்பது இடைச்சொல், ஆகையால் இது இடைச்சொற்றொடர் எனவே ஈற்று ம் கெடவில்லை. எவ் + ஆறு = எவ்வாறு; நிலைமொழி ஈரெழுத்துப் பெயராகி முதலெழுத்துக் குறிலாகவும் இருப்பதால் வ் இரண்டாக விரிந்து வருமொழி முதல் உயிரை ஏற்றது. இவ் + உலகு = இவ்வுலகு என்று ஆனதும் அப்படியே. அறியும் + ஈடு = அறியு மீடு, வினைமுற்றுத் தொடர்—ஆகையால் ம் கெடவில்லை. ஈடும் + எடுப்பும் = ஈடுமெடுப்பும்; எடுப்பும் + இல்லா = எடுப்புமில்லா—ம் கெடவில்லை, உம் என்பது இடைச்சொல்லாதலால். தெய்வம் + இவன் = தெய்வமிவன்—எழுவாய்த் தொடர், ஆகையால் ம் கெடவில்லை.

அறியி னரங்கர்முன் னாளரி யாகிய வப்பொழுது
கொறியி னவுணர்தம் வெள்ளங்கள் கோடியுங் கொன்
[றதிலோ
தறியின் வயிறிற் றகுவனெஞ் சுஞ்சர பத்துடனு
நெறியின் வகிர்ந்தபி னன்றோ தணிந்தது நீள்சினமே.

பதப்பிரிவு:—அறியின் அரங்கர் முன் ஆள் அரி ஆகிய அப்பொழுது கொறியின் அவுணர்தம் வெள்ளங்கள் கோடியும் கொன்றதிலோ தறியின் வயிறின் தகுவன் நெஞ்சும் சரபத்து உடலும் நெறியின் வகிர்ந்தபின் அன்றோ தணிந்தது நீள் சினமே.

பதவுரை.

அரங்கர் - திருவரங்கநாதர், முன் - முன்னே, ஆள் அரி ஆகிய - நரசிம்மம் ஆகிய, அப்பொழுது - அந்தக்கலாத்தில், அவுணர்தம்-அசுரர்களுடைய, வெள்ளங்கள் கோடியும் - கோடி வெள்ளங்களையும், கொறியின் - ஆடுகளைப்போல், கொன்றதிலோ - கொன்றதினாலோ, நீள் சினம் - அவரது மிகுந்தகோபம், தணிந்தது-ஆறியது?—இல்லை, பின் எதனால் என்றால்—அறியின் - ஆராயுமிடத்து, தறியின்-(தான் வெளிவந்த) தூணினது, வயிறின்—வயிற்றைப்போலவே, தகுவன் - அசுரனான ஹிரண்யனது, நெஞ்சும் - மார்பையும், சரபத்து - சிவசரபத்தினுடைய, உடலும் - உடலையும், நெறியின் - முறைப்படி, வகிர்ந்தபின் அன்றோ - பிளந்தபின் அன்றோ, நீள்சினம் - அவரது நீண்ட கோபம், தணிந்தது - அடங்கியது.

விரிவுரை:—பிரகலாதனைக் காப்பதற்குத் தூணிலிருந்து மிகுந்த கோபத்துடன் தோன்றிய நரசிம்மமூர்த்தி முதலில், அசுரர்கள் வெள்ளம் அத்தனையும் ஆடுமந்தையை அழிப்பதுபோல் அழித்துத் தீர்த்தார். ஆனாலும் அவர் கோபம் தணியவில்லை. பிறகு தான் பிறந்த கல்தூண் எவ்வாறு பிளந்ததோ அவ்வாறே ஹிரண்யனது மார்பைப் பிளந்தார். அதனினுங்கூட அவர் முதலிற்கொண்ட கோபம் தணியவில்லை. இந்தப் பெருங் கோபத்தால் உலகத்திற்கே அழிவுவரலாம் என்று கலங்கிய தேவர்கள் சிவபிரானிடஞ்சென்று தெரிவிக்க அவர் நரசிம்மத்தினுடைய சினத்தை அடக்கும்பொருட்டுச் சரபவடிவமாய்த் தன் சக்தியை அனுப்பினார். நரசிம்மரோ அச்சரபத்தையும் ஹிரண்யனைக் கிழித்தது போலவே கிழித்து எறிந்துவிட்டார். அதன் பிறகுதான் அவர் கோபம் தணிந்ததாம். சரபம் என்பது பாதி மிருகமும் பாதி பக்ஷியுமாகிய ஒருவகைப் பிராணி, மிகுந்த பலமுடையது. எட்டுக்காலும், சிறகுகளும் இரண்டுதலையும் இதனிற்கு உண்டு. இது சிங்கத்தையும் எளிதில் கொல்ல வல்லதாம். ஆகையாற்றான் சிவபிரான் தன் சக்தியை இந்த உருவத்தில் அனுப்பினார்.

குறிப்பு:—கொறியின், வயிறின், என்பவைகளில் உள்ள இன் உருபுகள், ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருளன. தறியின், என்பதிலுள்ள இன், சாரியை, ஆறும் வேற்றுமை உருபு தொக்கு இருக்கின்றது,

விரியுமாயின், தறி + இன் + அது = தறியினது என்று ஆகும்.

[வரையைப்
மறிக்குங் கயற்கண்ணிபங்காளன் வாழ்வெள்ளி மால்
பறிக்குங் கபடன்பணைப்புயமோவவன் பைங்கடகஞ்
செறிக்கும் புயஞ்செற்ற வாயிரந் திண்புய
[மோவவற்றைத்
தறிக்குந் திறமழு வோவரங் காசயத் தாருடைத்தே.

பதப்பிரிவு:—மறிக்கும் கயல் கண்ணி பங்கு ஆளன் வாழ் வெள்ளி மால் வரையை பறிக்கும் பணை புயமோ அவன் பை கடகம் செறிக்கும் புயம் செற்ற ஆயிரம் திண் புயமோ அவற்றை தறிக்கும் திறம் மழுவோ அரங்கா சயம் தார் உடைத்து ஏ.

பதவுரை.

அரங்கா - திருவரங்கா, மறிக்கும் - புரள்கின்ற, கயல் - கயல்மீன் போன்ற, கண்ணி-கண்களையுடைய பார்வதியை, பங்கு ஆளன்-பக்கத்தில் சேர்த்து இருக்கின்ற பரமசிவன், வாழ் - வாழ்கின்ற, மால்-பெரிய, வெள்ளி மலையை - இமயமலையை, பறிக்கும்-பெயர்த்தெடுத்த, கபடன் - வஞ்சகனாகிய இராவணனது, பணை - பருத்த, புயமோ - இருபது தோள்களோ, (அல்லது)

அவன்-அவ்விராவணனுடைய, பை-பசும்பொன்னாலாகிய, கடகம் - கடகங்கள், செறிந்த-அடர்ந்த, புயம் - தோள்களை, செற்ற - வலியழித்த கார்த்தவீர்யார்ச்சுனனுடைய, ஆயிரம்-ஆயிரம், திண் - வலியுடைய, புயமோ - கரங்களோ, (அல்லது)

அவற்றை-அவ்வாயிரங்கரங்களை, தறிக்கும்-வெட்டிவீழ்த்திய, திறம் - பராக்கிரமமுடைய, மழுவோ-பரசுராமனாக அவதரித்த நீ கொண்ட கோடாலியோ-(எது) ஜயம் - வெற்றி, தார் - மாலையை, உடைத்து-பெற்றது?

விரிவுரை:—இமயமலையை வேருடன் அசைத்துப் பிடுங்கிய இருபது கரங்களுடைய இராவணனை, ஆயிரம்புயங்களுடைய கார்த்தவீர்யார்ச்சுனன் அடக்கிச் சிறைசெய்தானாதலால் அவனைவிட ஆற்றலுடையவன் இவன். இக்கார்த்தவீர்யார்ச்சுனனை, ஜமதக்னியின் புத்திரனாய்ப் பரசுராமன் என்ற பெயரோடு அவதரித்த திருமால் வென்றார். ஆகையால் இவர் அவனைவிட ஆற்றலுடையவர். இவ்விதம், ஒன்றைவிட ஒன்று அதிகம், அதைவிட இன்னொன்று அதிகம் என, நயம்பட உரைப்பதற்கு மேன்மேலுயர்ச்சியணி எனப் பெயர். இதுவே வடமொழியில் சாராலங்காரம் எனப் பெயர்பெறும். உயர்வுபற்றியும் ஒன்றைவிட ஒன்று விஞ்சலாம், அல்லது இழிவுபற்றியும் விஞ்சலாம்; எப்படியாயினும் அது மேன்மேலுயர்ச்சி யணியே "பூமி மிகமிகப்பெரியது, அதனைத்தன் ஓரடியால் உள்ளடக்கிய திருமாலின் பாதம் பின்னும் பெரியது, அப் பாதம் பக்தர்களுடைய உள்ளத்தில் அடங்குவதால், அவ்வுள்ளம் அதனிலும் பெரியது"—என்று மேன்மேல் உரைத்துக்கொண்டுபோவது உயர்வுபற்றி வந்த இவ்வணிக்கு உதாரணமாகும். "அரிதரிது மானுடராதலரிது, அதனினு மரிது கூன் குருடு பேடின்றிப் பிறத்தல், கூன்குருடு பேடின்றிப் பிறந்தகாலையும்..." என்று வருகின்ற செய்யுளும் உயர்வுபற்றி மேன்மேலுயர்ச்சியணியாம். இனி, "தேவரில் மக்கள் தாழ்ந்தார், மக்களில் தாழ்ந்தன மிருகங்கள், மிருகங்களில் இழிந்தது கழுதை, கழுதையினும் கடையாவார் கண்ணோட்ட மில்லார் தாமே," என்பதும், "ஊசியோ எங்கும் நுழையும், ஊசி நுழையாத விடத்தும் நீர் நுழையும், நீர் நுழைய இயலாத விடத்தும் புகை நுழையக் கூடும், அப் புகையும் போகலாகா விடத்திலும் வறுமையுடையோன் புகுந்துசென்று இரக்கக் காணலாம்" என்பதும் இழிவுபற்றி வந்த மேன்மேலுயர்ச்சியணி. இழிவுபற்றியும் உயர்வுபற்றியும் மேன்மேலுயர்ச்சியணி தொடர்ந்து வந்திருக்கின்ற அழகு, புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் அமைந்திருக்கின்றது. அவ்வடிகளை இவ்வணிக்காக மாத்திரமல்லாமல் அதன் அருமையான கருத்திற்காகவும் நினைவில்வைத்துக்கொள்வது நலம்:—

ஈயென இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.

(இழிந்தன்று, உயர்ந்தன்று, என்பன எதிர்மறைபோல் தோன்றினும், ஓதலில் சிறந்தன்று ஒழுக்கமுடைமை என்பதுபோல், உடன்பாட்டுப்பொருளனவே. இழிந்தது, உயர்ந்தது என்று அர்த்தம் கொள்ளவேண்டும்)

"கொடு என்று ஒருவனிடம் போய் யாசிப்பது, இழிவான செய்கை; அதனினும் இழிவானது ஒருவன் வந்து கேட்கும்போது கொடுக்கமாட்டேன் என்பது. நாமாகவே சென்று ஒருவனுடைய குறையை அறிந்து அவனுக்கு வேண்டியவற்றை அவன் கேட்காமலே கொடுப்பது உயர்ந்த செய்கையாம்; ஆனால் அப்படி ஒருவன் கொடுத்தாலும் நாம் வாங்கிக்கொள்ளாதிருப்பது அதைவிட உயர்ந்தது" என்பது இவ்வடிகளின் பொருள்.

இந்த அணிக்கும் உயர்வுநவிற்சியணிக்கும் ஒரு சம்பந்தமுமில்லை; மயங்கவேண்டா. மேன்மேலுயர்ச்சி, ஆங்கிலத்தில் வழங்கும் climax, anti - climax என்ற அணிகளின் தன்மை வாய்ந்தது.

இலக்கணம்

நிலைமொழி யிறுதி மெய்யெழுத்து, வருமொழி முதலின் உயிர்எழுத்தோடு புணர்கின்ற பொதுவிதிகளையும், அவைகளில் மகரமெய் ஈற்றிற்குரிய சிறப்பு விதிகளையும் பார்த்தோம். மகரமெய்யீற்றுச் சொற்கள் வருமொழி முதல் உயிரோடு புணர்கின்ற சிறப்பு விதிகளுக்குமேல் இன்னுமொரு சிறப்புவிதி இருக்கின்றது.

இதுவரையில் சொன்னவை வருமொழி முதல், பன்னிரண்டு உயிர்களில் எதுவாயிருந்தாலும் பொருந்தும். இனிச் சொல்லப்போவது, வருமொழிமுதல் உயிரைச் சார்ந்ததாம். அது பின்வருமாறு:—

மரம் குளம் அறம் என்பனபோல் மகரமெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துக்கு மேற்பட்டஎழுத்துக்களையுடைய பகாப்பதங்களில், பெரும்பான்மை அந்த ஈற்று மகர மெய்க்கு முன்னே இருக்கும் உயிர்மெய்யெழுத்து அகரத்துடன்சேர்ந்த எழுத்துக்களாயிருக்கும். மரம், என்ற சொல்லில் ம் என்னும் ஈற்றெழுத்துக்குமுன் இருக்கும் உயிர்மெய் எழுத்து, ர என்னும் உயிர்மெய். இது ர் + அ, என்று ஆனது. ஆகையால் மரம் (மர்அம்) என்பதில், ம் என்னும் ஈற்றெழுத்திற்கு முன் இருப்பது அகரம். மற்றக் குளம் அறம் போன்ற சொற்களிலும் ஈற்றுக்கு அயலாக அ என்னும் உயிர் இருக்கக் காணலாம். இப்படியிருப்பதால்,

i. நிலைமொழியிறுதி மகரமெய்யாயும் வருமொழி முதல் அ என்னும் உயிராயும் அமைந்து, முன் உரைத்த விதிகளின்படி அந்த மகரமெய் கெடுமானால், சிற்சில சமயங்களில், மகர மெய் கெடுவது மல்லாமல், அந் நிலைமொழியில் மகரமெய்க்கு அயலில் நின்ற அ என்னும் உயிர் ஆ என்று நீள்வதும் உண்டு. உதாரணம்:—

மரம் + அடி = மரா அடி

இது ஆறும் வேற்றுமைத் தொகையாகையால், ம் கெட்டது. கெட்டு மரஅடி, என்றும் நிற்கலாம்; ஆனாலும், அந்த ம் என்னும் எழுத்திற்கு முன்னால் ரகரத்தோடு சேர்ந்துநின்ற அ, என்னும் உயிரானது, ஆ என நீண்டு மரா அடி என்றுகூட ஆவதுண்டு. இப்படியும் ஒவ்வொரு சமயம் ஆகலாம் என்று கொள்ளவேண்டுமே யொழிய இப்படியேதான் எப்பொழுதும் ஆகவேண்டுமென்று எண்ணப்படாது.

இங்கு நீண்டது வருமொழிமுதல் அகரம்அன்று. அது அப்படியேதான் இருக்கின்றது. நிலைமொழி ரகரத்தில் உள்ள அகரமே நீண்டது.

ii நிலைமொழி யிறுதி மகரமெய்யாயும், வருமொழி முதல் ஆ என்னும் உயிராயும் அமைந்து, முன் உரைத்த விதிகளின்படி, மகரமெய் கெடுமானால், சிற்சில சமயங்களில், அம்மகரமெய் கெட்டபின் அதற்கு அயலில் உள்ள அகரம் (முன்னுதாரணத்தைப் போல்) நீள்வது மல்லாமல், வருமொழி முதலில் உள்ள ஆகாரம் அகரமாய்க் குறுகிவிடுவதுமுண்டு. உதாரணம்:—

குளம் + ஆம்பல் = குளா அம்பல்.

இது குளத்தில் உள்ள ஆம்பல் என்று விரியுமாகையால் ஏழாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை ஆகும். ஆகவே, நிலைமொழியீற்று மகரமெய் கெட்டது. கெட்டபின், அதற்கு அயலில் இருக்கும் ளகரத்திலிருந்த அகரம், ஆ என நீண்டு குளா, என்று ஆயிற்று. ஆனால் அதுமாத்திரம் அல்லாமல், வருமொழி முதலில் உள்ள ஆகாரம், அகரமாகவும் குறுகி குளா அம்பல், என்று அச்சொற்கள் முடிந்தன.

இவ்விதிகள் அவ்வளவு முக்கிய மல்லவாயினும் நீங்கள் படிக்கும் நூல்களில் எவ்விடத்திலேனும் இவ்வாறு புணர்த்தி எழுதப்பட்டிருக்கக் கண்டால் இன்னதுதான் அது என்று தெரிந்துகொள்ள இயலாமல் திகைக்காவண்ணம் இங்கிதனைச் சொல்லிவைத்தோம்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[639-வது பக்கத் தொடர்ச்சி]

இத்தகைய இடங்களில் அன்றி மற்றைய இடங்களில், மிகக் கீழ்நிலையான புழு முதலிய உயிர்களுக்கும் மறித்துணர்வே எழுகின்றது. ஏதேனும் ஒன்று எதிரே முட்டுமானால் புழுவும்கூட "ஏதோ ஒருபொருள்" என்று தான் முன்னர் அறிந்திருந்த "ஏதோ ஒரு பொருள்" என்ற இனத்தில் வைத்துணர்ந்து பின் வாங்குகிறது. "அங்கே ஏதோ ஒன்று" என்று உணரும்போதும் மறித்துணர்வாகவல்லவா முடிகின்றது. "அங்கே" என்று இச் சட்டத்தினுள்ளே ஒரு பொருளைக் காணும்போது அவ் விடத்தன்மையையேனும் மறித்துணர்கின்றோம் அல்லவா?

மிகவும் கீழ்நிலையான உயிர்களினிடத்தே இரண்டு நிலைகள் இன்றியமையாது வேண்டப்படும். அறிவுநிலை செயலுறு நிலை என்ற இரண்டு நிலையாக விளங்கும் மனந்தான் அடிப்படையானது. ஓருயிர் ஒன்றையறிகிறது, அதற்குத் தக்கபடி செயலுறுகிறது. அவ்வளவுதானே வேண்டுவது. இத்தகைய மனமுடைய பொருள் உலகில் பிழைத்துப்போகலாம் அல்லவா? அறிவுறுநிலை, விருப்பறிவுறுநிலை வெறுப்பறிவுநிலை என இரண்டாகவும்; செயலுறுநிலை, விருப்புச் செயலுறுநிலை வெறுப்புச்செலுறுநிலை என இரண்டாகவும் பிரிந்து விளங்குமானால் அவ்வுயிர்க்குக் கேடேயில்லை. விருப்பறிவுறு நிலையாவது யாதெனில், விரும்பத்தக்க அல்லது விரும்பும்பொருள்களை அறியும் நிலையாகும். வெறுக்கத் தக்கனவாய் வருத்தமூட்டுபவற்றை அறிகிற நிலை வெறுப்பறிவுறு நிலையாகும். விரும்பும் பொருளை அறிந்து அதனை யடைய முயலுதல் முதலியன செய்யத் தொடங்குகின்ற நிலை விருப்புச் செயலுறு நிலையாகும். அஞ்சத்தக்கன முதலியவற்றைக் கண்டு அவற்றினின்றும் தப்பிப்பிழைப்பதற்கு முயலும்நிலை வெறுப்புச் செயலுறு நிலையாகும். விருப்பறிவுறுநிலையும் விருப்புச்செயலுறு நிலையும் ஒன்றாக இயைந்தும், வெறுப்பு அறிவுறுநிலையும் வெறுப்புச்செயலுறுநிலையும் ஒன்றாக இயைந்தும் அமைந்து கிடக்க நேருமேயானால் விரும்பத்தக்க பொருளைக் கண்டறிந்ததும் அதனை விரும்பிச் செய்யவேண்டுவனவற்றைச் செய்தும், வெறுக்கத்தக்கனவற்றைக் கண்டறிந்ததும் அதனின்றும் தப்பிப் பிழைப்பதற்கு முயன்றும், ஓருயிரானது பிழைத்து வாழலாம். இத்தகைய மனமே பின்னர் வளர்ந்து விரிந்து நம்முடைய மனமாகமுற்றி இருக்கிறது என்கிறார் மக்டூகல் என்ற பெரியார். இந் நிலைகள் இயற்கைச்செயனிலைகளே யாகும். வானம்பாடி தன் பெட்டையைக் கண்டு விருப்புற்று அடைகின்றது; பேரொலி கேட்டு அஞ்சிப் பறந்தோடுகிறது. இவை ஆராய்ச்சியின் பயன் அன்று; அதன் இயற்கையமைப்பு அப்படி இருக்கிறது.

கீழ்ப்படியிலுள்ள உயிர்கள் இவ்வாறு இருக்க, நாமோ விருப்புப்பொருள், வெறுப்புப்பொருள் என்று பிரித்துணர்தலோடு அமையாமல், ஒரு பொருளை எத்தனையோ நூறு பிரிவுகளாக வேறுபிரித் துணர்கின்றோம். நம்முடைய அறிவுநிலை பெரியதொரு ஆலமரம் போல் விளங்குகின்றதென்னலாம். அதற்கு அடிமரமாக நிற்பது விருப்பையும் வெறுப்பையும் அறியும் அறிவுறுநிலையே யாகும். அவ் வடிமரத்திலிருந்து பல கிளைகளும், கிளைகளிலிருந்து பல கவடுகளும் கொம்புகளும், கொம்புகளிலிருந்து பல இலைகளும் பிரிந்து பிரிந்து போகலாகின்றன. ஒவ்வோர் கிளையினின்றும் மறுபடியும் வேர்கள் கீழிறங்கி விழுதுகளாய்ப் புது மரங்களாய் மேலேயும் பழையபடியே பரந்துகொண்டே போகின்றன. உலகத்துப் பொருள்களை உயிர்

கள் என்றும் உயிரிலிகள் என்றும் பிரித்தறிகின்றோம். உயிர்ப் பொருள்களை நிலைத்திணைப் பொருள்களாகிய மரம் முதலியனவாகவும் இயங்குதிணைப் பொருள்களாகிய பாம்பு பறவை விலங்கு மக்கள் முதலியனவாகவும், வகுத்து உணர்கின்றோம். நிலைத்திணைப் பொருள்களை அறுகு தென்னை முதலியபுற்களாகவும், ஆல் அரசு வேம்பு முதலிய மரங்களாகவும், முல்லை புடலை முதலிய கொடிகளாகவும், களா முள்ளி முதலிய செடிகளாகவும் வேறுபடுத்துகிறோம். மரங்களையும், ஆல இலைபோல வட்ட இலையுடையன, அரசு பூவரசு முதலியனபோல ஒருமுனை யிலை யுடையன; வேப்பிலைபோலப் பலமுனை யிலை யுடையன, என்று பலவகையாகப் பிரிக்கின்றோம். இவ்வாறே பூக்களையும் புறவிதழ் அகவிதழ் முதலியவற்றின் அமைப்பைக்கொண்டும், அவற்றின் நிறத்தைக்கொண்டும் பல பிரிவுகளாகப் பிரித்து உணர்கின்றோம். மரநூல் தரைநூல்முதலான பலபல நூல்களை ஆராய்கின்றவர் இன்னும் எத்துணையோ வகையாக நுணுகி நுணுகிப் பலவகைப் பிரிவுகள்செய்து, உணர்கின்றனர். மரநூற் புலவர் ஒருவர் ஒரு பூவைப் பார்த்தவுடன் உயிர்ப் பொருளில் அடங்கிய நிலைத்திணைப் பொருளில்பட்ட இன்னவகையிற்சேர்ந்தமரத்தின் இன்ன இனத்தைச் சேர்ந்த பூ இது என உணர்கின்றார். இவ்வாறு ஒவ்வொரு நூற்றுறையிலும் ஆராய்ச்சி செய்தவர்களது அறிவுநிலையானது வெளியுலகத்தின் எதிரே பிடித்த கண்ணாடியைப்போல எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. வெளியுலகம்போல அதுவும் உள்ளத்தினுள்ளே உலகமாகி அகவுலகம் எனப் பெயர் பெறும். "அண்டத்தி லுள்ளதெல்லாம் பிண்டத்திலே தோன்றும்" என்ற உண்மை இன்னவாறு மெய்யாதல் காண்க.

"அங்கே ஒன்று" என்று குழம்பிக் கிடக்கும் நிலையிலிருந்து மரநூற்புலவரது "இன்ன மரத்து இன்ன வகையான பூ" என்ற நுண்ணிய உணர்வுநிலைக்குப் பொருட்குறிப்பானது வந்துவிட்டது. குறிப்பானது இன்னவாறு சிறப்புநிலை பெற்று வருகின்றது. ஒவ்வொருவரும் எதைக் குறிக்கின்றார்கள் என்பதுஅவ்வவர்களுடைய முன்னைய அறிவையும் துப்புரவையும்(Experience) பொறுத்திருக்கின்றது.ஓர்பானையின் ஒலியே பல பேர்க்கும் பலவழியாகப் பொருட் குறித்து வருதலை முன்னரே கண்டோம். அவ்வாறே ஒரு பூவைக் கண்டபோது மரநூற் புலவர் மனத்தெழும் குறிப்பு வேறு, குழந்தையின் மனத்தேஎழும் குறிப்பு வேறு. அக்குறிப்பிலே முன்னைய துப்புரவு முழுதும் உள்ளீடாக விளங்குகிறது என்னலாம்.

என்னுடைய நண்பர் ஒருவர் புதுமாப்பிள்ளையாகித் தம்முடைய மாமியார் வீட்டிற்குப் போனபொழுது நடந்த தொன்று எனது நினைவிற்கு வருகிறது. அவருடைய மைத்துனன்மார் அவரை எள்ளி நகையாடுவதற்காக முட்டைவடிவாகச் செதுக்கிய கூழாங்கல்லை அவருடைய இலையில் குழம்போடு படைத்தார்கள். அதை வாயில்வைத்துக் கடித்தவுடன் ஏமாற்ற மடைந்தார்; எல்லோரும் ஏளனம் செய்து கைகொட்டிச் சிரித்தனர்; அவரும் நாணித் தலை குனிந்தார். அவர் அதை ஒரு வெந்தமுட்டை என்று உணர்ந்தபோது, என்ன என்ன எதிர்பார்த்தனரோ அவ்வவ் வியல்புகள் இந்தப் புதுப்பொருளில் காணுமையாலல்லவா ஏமாற்ற மடைந்தார். வெந்த முட்டை, தான் விரும்பிய சுவையோடும், மெத்தென்றிருக்கும் என்றுமென்று தின்னக் கை நீட்டினர். சுவையின்றி வெட்டென்று பல்லைத் தாக்கவே ஏமாந்து தலை குனிந்தார். எடையில்லாத பொருள் என எண்ணி, எளிதிலெடுக்கத் தொடங்கியபோதே எடை மிக்கிருப்பது கண்டு திகைத்தார். அப்பொருளை இலையில் கண்டபோது "இப்பொருள் மெத்தென்றிருக்கும்; பல்லால் மெல்லக் கூடியது; எளிதில் எடுக்கக் கூடியது; சுவையுடையது; உண்ணக் கூடியது" என்ற இயல்புகளே முட்டை தின்னியாராகிய எனது நண்பர், முன்னறிந்த முட்டையின் இயல்புகளாகும். இவை எல்லாம் அவ் வெள்ளைப்பிழம்பை இலையில் கண்டதும் அக் கட்புலன் வழியே வந்து அப்புலப் பொருளின் குறிப்பாகி முட்டையுணர்வென எழுந்து விளங்குகின்றன. எதிர்பார்த்தபடி நடவாமற் போனால், பேயோ கண்கட்டோ சொக்குப்பொடியோஎன மருண்டு வாயைப் பிளக்கிறோம். நம்முடையகுறிப்புப் பொய்த்துப்போவதால் அல்லவா இந்த ஏமாற்றமும் இந்த வியப்பும். இவ்வியப்பையும் இவ்வேமாற்றத்தையும் எண்ணிப் பார்த்தால் குறிப்பென்பது யாதென நன்கு விளங்கும். நாம் முன்னே அறிந்தவை யனைத்தும் பின்னே ஒரு பொருளைக் கண்டபோது நம்முணர்வினுள் நுழைந்து ஒன்றாய்எழுகின்றன. இவையனைத்தும் அல்லவா குறிப்பு என்று பெயர் பெறுகின்றன.

ஆனால், அவ்வவ் விடத்திற்குத் தக்கபடி, இவ்வாறு முன்னறிந்தவற்றில் ஒரு சில முன்னணியில் நிற்கின்றன. சிவந்த கிச்சிலிப்பழம் ஒன்று என் எதிரே ஒரு தட்டில் கிடக்கிறது. என்னை ஏளனம் செய்து நகைக்கும் நண்பர்மேல், விளையாட்டாக எறிய ஏதேனும் ஒரு பொருள் அகப்படாதா என்று தேடும்போது இப்பழத்தைக் கண்டதும் இதனை எடுத்து எறிகின்றேன். அப்போது அதனுடைய மெத்தென்றநிலையையும் நசுக்குண்டு சாறுதெறிக்க மேல்விழுகின்ற இயல்பையும் அப்பொருள் குறித்து நிற்கின்றது. நீர்வேட்கை மிகுந்தபோதோ அதனுடைய இனிய சுவையையும் குளிர்ச்சித் தன்மையையும் குறிக்கின்றது.

மற்றொரு எடுத்துக் காட்டினால், குறிப்பு என்பது சிறப்புநிலை யடைவதை மக்டூகல் என்ற பெரியார் விளக்குகின்றார். மாலைக்காலத்திலே நான் என் வீட்டில் ஒரு கரும் பிழம்பைக் காண்கின்றேன். சிறிது உற்று நோக்கியதும் ஒரு நாய் உடம்பை வளைத்துக் கொண்டு படுத்திருக்கிறதென்று உணர்கின்றேன். கரும் பிழம்பு எனத் தோன்றியது இப்போது பொருட் சிறப்புப்பெற்று ஒருநாயாகி என்னுடைய மனத்தே விளங்குகிறது. பொதுவாக நாய்களைப் பற்றியானறிந்துள்ளதெல்லாம், அப் புலக்காட்சியின் குறிப்பாகின்றது. முன்னே ஒரு நாயால் கடியுண்ட நண்பர் ஒருவர் என்னுடன் வருகிறார்; அவர் நாய் என்று உணர்ந்ததும் பின்வாங்குகிறார். நாய்களோடு எந்நாளும் பழகும் நானோ பின்வாங்காது முன்னுகச் சென்று எட்டியுதைக்கின்றேன். தடையொன்று மின்றிக் காலோடே அப்பொருளும் பறக்குமானல், நாய் என உணர்ந்தது தவறு என்று வெளியாகிறது. பேயோ என்று திகைக்கின்றேன், அருகிலிருக்கும் என்நண்பர் அஞ்சி நடுங்குகின்றார். அருகே மற்றொரு கரும்பிழம்பைக் கண்டு இவ்வாறே உதைத்தபொழுது காலோடு பறக்

காமல் நாய்போல மெத்தென்று காலில் படுகின்றது. அஃது அசைந்து எழுந்து ஓடும் என்று எதிர்பார்க்கின்றேன். அசையாமல் அங்கேயே கிடக்கிறது. உயிருள்ள நாய் என்று யான் எண்ணியது தவறு என அறிகின்றேன். அஃதொரு செத்த நாய் என உணர்ந்து, அதனை அப்புறப்படுத்த எனது வேலையாளைக் கூப்பிடுகின்றேன். வீட்டினருகே வந்ததும் வேறொரு கரும்பிழம்பைக் காண்கிறேன். நான் வளர்த்துவரும் கறுப்பன் என்னும் கருநாய் என உணர்கின்றேன். 'கறுப்பா' என்று கூப்பிடுகின்றேன். என்னுடைய நாயைப்பற்றி யான் முன்னே அறிந்திருந்ததெல்லாம் எனது குறிப்பாக எழுகின்றன. கரும்பிழம்பென்ற முதல் நிலையையும், கருநாய் என்ற இரண்டாம் நிலையையும், என்னுடைய நாய் என்ற மூன்றும் நிலையையும் அடைந்து குறிப்புநிலை சிறப்புற்றுச் செல்வது காண்க. நான் இதுவரையில் நாயைப் பற்றி அறிந்ததெல்லாம் அக் கரும்பிழம்பின் குறிப்பாக எழுந்ததால் அல்லவா மேற்கூறியவா றெல்லாம் எதிர்பார்த்து அவ் வெதிர்பார்த்தலுக்கேற்ப நடந்துகொண்டேன். என்னுடைய குறிப்புநிலைமட்டுமோ இவ்வாறு சிறப்புநிலைபெற்று விளங்குகிறது? என் நாயினுடைய குறிப்பும் மூன்றும்படியிலேறித் திகழ்கிறது. "ஏதோ ஒரு பொருள் அசைந்து வருகின்றது" என்றும் பின் "யாரோ ஒருவன் வருகின்றான்". என்றும், பின்னர் "நம் தலைவன் வருகிறான்" என்றும், உணர்ந்து யான் கூப்பிடுமுன்னரே வாலைக் குழைத்துக்கொண்டே ஓடிவந்து என்னைச் சுற்றிச்சுற்றிக் குரைக்கிறது. என்னையுணராது வேறு ஒரு புது ஆள் வருகிறான்என உணர்ந்திருக்குமானல் எறிக்குதித்துக் கடித்துவிடும் அல்லவா? என்னுடைய ஒழுக்கமும் என்னுடைய நாயின் ஒழுக்கமும்எங்களிருவருடைய பழையகூட்டுறவைப் பற்றி யிருக்கின்றன.' ஆனபடியினல், ஒரு பொருளை நாம் உணரும்போது நமது நனவிற்கு வருவது காட்சிப்புலன் கருத்துப்புலன் என்ற இவைமட்டுமேயல்ல. நாம் உணரும் பொருள் முழுதுமே நனவிற்குள்ளே புகுந்துகொள்கிறது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

5-ம் பத்து, 8-ம் தசகம்

[641-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

சூழ்கண் டாயென் தொல்லை வினைய
றுத்துன் னடிசேரும்
ஊழ்கண் டிருந்தே தூராக் குழிதூர்த்
தெனைநா ளகன்றிருப்பன்
வாழ்தொல் புகழார் குடந்தை கிடந்தாய்
வானோர் கோமானே
யாழி னிசையே யமுதே யறிவின்
பயனே யரியேறே.

உரை:—என் தொல்லை வினையறுத்து சூழ்கண்டாய் - அநாதியாய் என்னைத் தொடர்ந்துவரும் பழமையான கர்மங்கள் என்னைப் பாதிக்காமல் விட்டுவிடும்படி ஓர் உபாயத்தைப் பகவானே நீ தேடவேண்டும். உன் அடிசேரும் ஊழ் கண்டிருந்து - உன் திருவடிகளை அடைவதே என் ஆன்மாவிற்கு உரியதென்பதுஎனக்குத் தெரிந்திருந்தும், தூராக் குழி தூர்த்து - எவ்வளவு போகங்களைத்தான் அனுபவித்தாலும் நிறைந்து திருப்தியடையாமல் இன்னும் மேல்மேல் வேண்டுகின்ற என் ஐம்புலன்களாகிய அந்தப் பெரிய பள்ளத்தைத் தூர்க்கின்றதே காரியமாய், எனை நாள் அகன்று இருப்பன் - அவைகளின் வாய்ப்பட்டு உன்னைத் தொழுவதின்றியே ஐயோ நான், எத்தனைகாலம் அகன்றிருப்பேன். தொல் புகழார் வாழ் குடந்தை கிடந்தாய் - பழைய புகழுடைய மேன்மக்கள் வாழ்கின்ற குடந்தையம்பதியில் கண்வளர்கின்றவனே, வானோர் கோமானே - நித்தியஸூரிகளுக்கு நிர்வாஹகனே, யாழின் இசையே - யாழின் இனிய இசை போன்றவனே, அமுதே - இரஸிகர்களுக்கு அமிர்தமே, அறிவின் பயனே-யோகபலத்தால் சுத்தஞானம் பக்தி இவைகளை அடைந்தவர் அனுபவிப்பதற்கு அமைந்த பயனுயிருப்பவனே, அரி ஏறே - சிம்மம் போன்ற பௌரஷமுள்ளவனே.

7-ம் பாசுரம்

அரியே றேயென் னம்பொற் சுடரே
செங்கட் கருமுகிலே
எரியே பவளக் குன்றே நாற்றோ
ளெந்தா யுனதருளே
பிரியா வடிமை யென்னைக் கொண்டாய்
குடந்தைத் திருமாலே
தரியே னினியுன் சரணந் தந்தென்
சன்மங் களையாயே.

பொழிப்புரை:—உன்னுடைய கிருபையாலே உன் அழகைக் காட்டி என்னை ஆத்மாந்தம் தாஸ்விய ரஸத்தில்அமையச்செய்தாய்.இனிஉன் திருவடிகளைப் பிரிந்து ஒரு க்ஷணமாத்திரம் நிலைநிற்கமாட்டேன். ஆனபின்பு உன் திருவடிகளைத் தந்து பின்னர் என் பிரதிபந்தத்தைப் போக்கியருளவேண்டு மென்கிறார் —ஆறுயிரப்படி.

8-ம் பாசுரம்

களைவாய் துன்பங் களையா தொழிவாய்
களைகண் மற்றிலேன்
வளைவாய் நேமிப் படையாய் குடந்தை
கிடந்த மாமாயா
தளரா வுடல மெனதாவி
சரிந்து போம்போது
இளையா துனதா ளொருங்கப் பிடித்துப்
போத விசைநீயே.

பொழிப்புரை:—திருவுள்ள முண்டாகில், எனது துன்பத்தைப் போக்கியருளி நான் உன்னைச் சேரும்படி செய். இல்லையானாலும் சரி. என் துக்கத்தைத் தீர்ப்பவர் வேறு யாரும் இலேன். ஒரு விண்ணப்பம் மாத்திரம் நானுனக்குச் செய்துகொள்வேன். உனது திருக்கையில் சக்கிராயுதம் தரித்திருப்பது எம்போல்வார் துயரத்தைக் களைவதற்காக அல்லவோ! திருக்குடந்தையில் சயனம்செய்திருப்பதும் பக்தர்களுக்கு உதவி செய்யவே அல்லவோ! ஆச்சரியமான சக்தி

யுள்ளவன் அல்லனோ நீ. என் உடல் தளர்ந்து ஆவி சரிந்து போகும்சமயத்தில் சோராமல் நான் உன்றன் பாதங்களை நெருங்கப் பிடித்துக்கொண்டு போகும்படி நீ சம்மதிக்கவேண்டும். இதுவே நான் செய்துகொள்ளும் விண்ணப்பம்.

9-ம் பாசுரம்

இசைவித் தென்னை யுனதா ளிணைக்கீ
  ழிருத்து மம்மானே
அசைவி லமரர் தலைவர் தலைவா
  ஆதிப் பெருமூர்த்தி
திசைவில் வீசுஞ் செழுமா மணிகள்
  சேருந் திருக்குடந்தை
அசைவி லுலகம் பரவக் கிடந்தாய்
  காண வாராயே.

உரை:—என்னை இசைவித்து - உன் கலவியில் ஆசைப்படும்படியும் உன்னைவிட்டு அகன்றால் துக்கப்படும்படியும் என்னைச் செய்வித்து, உன் தாள் இணைக்கீழ் இருத்தும் அம்மானே - உன் திருவடிகளே பரமப்ராப்பியம் என்று என்னை உன்னிடத்தில் திடமான பக்தியில் இருத்திக்கொண்ட பிரபுவே, அசைவுஇல் அமரர் தலைவர் தலைவா - நித்திய தேவர்களான கருடன் சேஷன் முதலானவர்களுக்குத் தலைவனே, ஆதி பெருமூர்த்தி - எல்லாத் தேவர்களுக்கும் முதன்மையானவனே, திசை - எட்டுத்திக்கிலும், வில் - தேஜஸ்ஸை, வீசும் - பிரகாசிக்கும், செழு-செழுமையான, மாமணிகள்-சிறந்த இரத்தினங்கள்போன்ற பேயாழ்வார் பூதத்தாழ்வார் பொய்கையாழ்வார் திருமழிசைபிரான் அனைய பல பக்தர்கள், சேரும்-வந்துசேரும், திருக்குடந்தையில் - குடந்தைமாநகரில், அசைவில்-பக்தர்களை ஏற்பானோ ஏற்கமாட்டானோ என்ற சஞ்சலம் இல்லாத, உலகம்-உலகத்தவர், பரவ—உன்னைத் துதிசெய்யும்படி, கிடந்தாய் - கண்வளர்கின்றவனே, காண வாராயே - நான் கண்ணுலாவது காணும் வண்ணம் நீ வந்தருளவேணும்.

குறிப்பு:-"நீகண்வளருகின்ற அழகை நான் முன்பே கண்டுளேன்; இனி உன் நடையழகைக் கண்டு நான் வாழும்படி நடந்து வந்தருளவேண்டும்" என்று இருபத்துநாலாயிரப்படி பதப்பிரயோஜனம்காட்டியிருப்பது இங்குக் கருத்துள் கொள்ளத்தக்கது.

10-ம் பாசுரம்

வாரா வருவாய் வருமென் மாயா
  மாயா மூர்த்தியாய்
ஆரா வமுதா யடியே னாவி
  யகமே தித்திப்பாய்
தீரா வினைகள் தீர வென்னை
  யாண்டாய் திருக்குடந்தை
ஊரா வுனக்காட் பட்டு மடியே
  னின்ன முழல்வேனே.

உரை:—வாரா - வராததுபோல், அருவாய்-என் மனதால்மட்டும் காணவல்ல சூக்ஷ்மமாய், வரும் - வருகின்ற, மா மாயமூர்த்தி-அதிகமும் ஆச்சரியமான சக்தியுள்ளவனே, ஆரா அமுதாய் - எத்தனை காலம் அனுபவித்தாலும் திருப்திவராத அமிர்தமே, என் ஆவி அகமே தித்திப்பாய் - என் ஆன்மாவிற்குள்ளே மிகவும் பிரியமான இனிப்பாகத் தோன்றுகின்றவனே, தீராத வினைகள் தீர என்னை ஆண்டாய் - உன் கிருபையால் அல்லது நசிக்கமாட்டாத கர்மங்களெல்லாம் ஒழியும்படி என்னை ஆண்டவனே, திருக்குடந்தை ஊரா - யாவருக்கும் சுலபமாய்ச் சேவை சாதித்துக்காப்பாற்றும்வண்ணம் திருக்குடந்தையை ஊராகக்கொண்டவனே, உனக்கு ஆட்பட்டு இன்னும் உழல்வேனே - அடியேன் உனக்குத் தாஸனாக அமர்ந்த பிறகும் இன்னமும் கிலேசப்படக் கடவேனோ.

குறிப்பு:—"என் மனோரதமெல்லாம் திருக்குடந்தையில் ஸித்திக்குமென்று இத்தனை அலற்றச் செய்தேயும் அது பூர்த்தியாகக் காணுமையாலே, இன்னம் எத்தனைத் திருக்கோவில்களின் திருவாசலில் தட்டித்திரிவேன்" என்று, உழல்வேனோ என்னும் பதத்திற்கு இருபத்துநாலாயிரப்படிகாரர் பதப்பிரயோஜனம் எழுதியிருப்பது மிகவும் பொருத்தமாயிருக்கின்றது.

11-ம் பாசுரம்.

உழலை யென்பிற் பேய்ச்சி முலையூ
  டவளை யுயிருருண்டாய்
கழல்க ளவையே சரணாக் கொண்ட
  குருகூர்ச் சடகோபன்
குழலில் மலியச் சொன்ன வோரா
  யிரத்து ளிப்பத்தும்
மழலை தீர வல்லார் மானேய்
  நோக்கி யர்க்கே.

கருத்து:—ஆச்ரிதர்களுடைய விரோதிகளை ஸம்ஹரிக்கும் ஸ்வாபனான எம்பெருமான் திருவடிமலர்களையே, அடைவதற்கு ஹேதுவாகவும் அடையும் பரம்பொருளாகவும் நிச்சயித்துள்ள குருகூர்ச் சடகோபன், ஸ்ரீகிருஷ்ணபகவானது குழலோசையை இனியவாகச் சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் தழதழப்புத் தட்டில்லாமல் அப்பியசிப்பவர் மான்போன்ற நோக்கமுள்ள ஸூரிகள் காமுகர்க்குப் பிரியமாவதுபோல், எம்பெருமானுக்குப் பிரியமுள்ளவர் ஆவார்.

இத்தசகத்தின் சாரம்:—திருக்குடந்தை ஆரா அமுதப்பெருமான் ஆச்ரிதரைத் தன் தாஸியத்திலேயே கடைபிடித்து நிற்கும்படி செய்கின்றானென்றும், இதற்கு முக்கிய காரணம், அவனது கீர்த்திவாய்ந்த நற்குணங்களிலும் அவனது திவ்ய ஸௌந்தர்யத்திலும் தாஸர்கள் ஈடுபட்டு மோகம் அடைவதே யென்றும், அருளிச்செய்கிறார்.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

அமீல்

[634-வது பக்கத் தொடர்ச்சி]

நன்மை தீமைகளின் ஜனன ஸ்தானம் நாமேயாம்; விரூபங்கள், பிசாசுகள், தெய்வங்கள் முதலானவைகளைக் கற்பித்து அதனால் அழிதற்கும், தக்கன செய்து உயர்தற்கும் மூலகாரணம் நாமே; அகால மரணத்திற்கும், நீடிய வாழ்க்கைக்கும் அதிகாரிகள் நாமே.

உலகாதிகளெல்லாம் மிகவும் அழகியனவாகக் கவிகளுக்குத் தோன்றுகின்றன; மற்று விகாரமும் தீமையும் இழிவும் மிகுந்தனவாகத் தீயோர்க்கு இவ்வுலகம் தோன்றுகின்றது. தீயவன் தன்னைச் சுற்றிலும் ஓர் நரகத்தை நிருமித்துக்கொண்டு பின் அதனைப் பார்த்துக் கலங்குகின்றான்; இலளிதன் இந்த உலகத்தை ஓர் உய்யானவனமாகப் பாவித்து இன்புறுகின்றான்; வைகுண்டமாக மாற்றி அறவோன் ஆனந்திக்கின்றான்; வீரனோ காம்பீரியம் மிகுந்த சக்தியின் உருவங்களாகப் பார்த்து நடிக்கின்றான். நாம் எல்லோரும் நம்முடைய மனோபாவனைகளின் அடிமைகளே. நம் உள்ளத்தில் உள்ளவைகளைத்தான் வெளியிலும் பார்க்கலாகின்றோம். நமக்கு நன்மை செய்வதும் தீமை புரிவதும்நாமே; மாறுபடுவதெல்லாம் புறவுலகிலத்திலன்றி நம்முடைய அகத்திலேயே நிகழ்கின்றன.

எவ்வாறு இருக்கவேண்டுமென விரும்புகின்றோமோ, அவ்வாறே இருந்துவருவதாகப் பாவித்தல் நம்முடைய பெரிய மதிமருட்கைககளி லொன்றுவது போலும்.

என் உள்ளறிவு கெடாமலும், சுயப்போக்கைஅவமதிக்காமலும், கடமையை மறக்காமலும், பலன்கள் வழி யலைந்து திகைக்காமலும், வாழ்க்கையாகிய சாகரத்தில் மூழ்கித் திளைக்க ஆவலுறுகின்றேன். பற்பல சமயங்களில் நாடோடியின் குணம் என்னைச் சார்ந்து நாலாபக்கங்களிலும் திரிவைத்து நான்பெற்று அநுபவிப்பவைகளை வெறுத்துத் துறக்கும்படி செய்து வருத்துகின்றது. எரியும் நெருப்பில் வார்த்த நீர்த்துளிபோல் அகண்ட நிரந்தரப் பிரபஞ்சத்திலும் பிரபஞ்சாதிகளிலும் என்மனம் அகப்பட்டு ஆவியாகிப்பறக்கின்றது; மேலெழும்பிய ஆவியானது குளிர்ச்சியினால் தாக்கப்பட்டவுடன் நீர்த்துளிகளாக இழிந்து வீழ்தல்போல், ஆர்வம் அடங்கிப்பிரபஞ்சப்பிரக்ஞை மீளவே, என் மனம்மறுபடியும் உலகவாழ்க்கையில் படிந்து தவிக்கின்றது. விரிதலும் ஒடுங்கலும் விரித்தலும் மறத்தலும் வெறுத்தலும் தூய்த்தலும் இனித்தலும் துக்கித்தலுமான போலைகளால் ஓயாமல் அலைக்கப்படுகின்றது என்உள்ளம்! ஒரு சமயத்தில் உலகை யெல்லாம் வெல்லவேண்டுமென்ற அவாவும், வெல்லக் கூடுமென்ற உறுதி நம்பிக்கையும், மற்றொரு சமயத்தில், உள்ளறிவானது ஆழ்ந்துவிரியவே, அவ்விருப்பம் பயனற்றதென்ற எண்ணமும் கைகூடாதென்ற பாவனையும் மாறிமாறி என்னுள்தோன்றி என்னை அலைப்புறுத்துகின்றன! ஆரத்தீர ஆலோசித்துப் பார்க்கும் ஆன்மாவுள் நிகழும் போராட்டங்கள் இத்தகையன போலும்; ஜீவான்மக் காதலி பேரான்மக் காதலனை மணந்து ஒன்றுதற்குமுன் இத்தன்மைய ஐய விபரீத எண்ணங்களும் உணர்ச்சிகளும் எழுவது இயற்கையே போலும்; மேலும், வளர்ச்சிக்கும் பேரின்ப நுகர்ச்சிக்கும் இது வழியாயினும் ஆகலாம்.

பல்வேறு அவதிகளுக் கிலக்காகித் துடித்தவனே அன்பு இன்புகளின் பெருமையைப் உணர்வான்.

உன் நிலைமை ஏதானாலும் அதைப் பழிக்காதே; அதினின்றுதான் பெருமையும் சிறுமையும் உண்டாகின்றன.

அகண்ட மோக்ஷலோகமானது இப் புவியின் ஒவ்வொரு பாகத்தினின்றும் சம தூரத்தில்தான் இருக்கின்றது என்ற விஷயத்தை மறவாதே.

உலகாதிகளெல்லாவற்றுள்ளும் உன் மனதைச் செலுத்தி அலப்புறாதே. அவைகளிலிருந்து உனக்கு உரியவைகளைத் தெளிந்துகொண்டு பின்னர் அதனையே பின்பற்றி ஒழுகி மனச்சாந்தி பெறுவாயாக.

அபக்தி அவிசுவாச அசிரத்தைகளே, கோழைத்தனத்திற்கும் பச்சாத்தாபத்திற்கும் விளைநிலமாவன. மாந்தர் படும் அல்லல்களுக்கெல்லாம் மூலகாரணமாவது தன்னம்பிக்கையும் நன்னம்பிக்கையும் இன்மையேயாம்.

அகாத நன்மையும் பூரண ஞானமும் ததும்பப்பெற்ற கடவுளால் ஜீவகோடிகள் ஆதரிக்கப்பட்டுவருகின்றன என்பதை அறிந்து, "நன்மை தீமை"களுக்கெல்லாம் அதிகாரி அவனே என்பதையும் உணர்ந்து, நம்முடைய உயர்விற்காகத்தான் இடையூறு இடுக்கண்கள், அவைகளும் நாம் பொறுக்குமளவுதான், நம்மைத் தாக்குகின்றன எனவும், எவ்வளவு கஷ்டநஷ்டங்களுக்குள்ளாகின்றோமோ அதே அளவுடன் கடவுளருள் சுரக்கப்பெற்றுத் தெய்விகச்சக்தி ஊறி உய்வோமெனவும் நம்பியே நாம் நம்முடைய வாணாளைச் செலுத்தவேண்டும்.

பணிவினின்று அநுதாபமும், அவ் வநுதாபத்தினின்று மன்னிப்பும் எழுகின்றன.

சக்தியின் பலவித இயக்கங்களின் இயைபே வாழ்க்கையின் நிலை. பரஸ்பர முரண்கொண்ட சக்தியக்கங்களுக்குள் நிகழும் கொடும்போர்தான் ஜீவகாலத்தைச் செலுத்துவதாகும்.

நிர்மலமான மனத்துடன் உள்ளதை உள்ளவாறு தெளிந்து கடைப்பிடித்து ஒழுகலே ஞானத்தின் இலக்ஷணமாகும்.

ஏனையோர்க்குக் கடினமானவைகளை எளிதிற் செய்துமுடித்தலே விவேகியின் குணாதிசயமாகும்; மற்று விவேகிகளுக்கும் கஷ்டசாத்தியமானவைகளை நிராயாசத்துடன் செய்து பூர்த்திசெய்தலே வரப்பிரசாதிகளின் அரும்பெருங் குணமாகும்.

ஒழுங்கும் ஆதாரமுமற்ற இச்சைகளுக்கு இணங்குவதின்றி நம்முடைய சக்திக்குத் தக்கபடி பிறர்க்கு ஹிதஞ்செய்தலே நம்முடைய கடமையாகும்.

நம்மிடம் எஞ்சிநிற்கும் மிருகத்வத்தை அறிவுறுத்துவது தன்னயச்சிந்தனையேயாம். மானுடத்வம் என்பது தியாகசிந்தனையினாற்றான் பெருகித் திகழும்.

காந்தக் கல்லானது கடினப்பொருளுடன் மோதியபின்தான் தீப்பொறிகள் பறப்பதுபோல், இன்னல் இடர்கள் என்பவைகளால் வதக்கப்பட்டபின் தான் உட்சக்தி பெருகி ஆன்மவொளி வெளிப் பரவுகின்றதுபோலும்.

தன்னிடம் குறைவா யுள்ளதைப் பெரிதாக மதித்தலும், பெற விரும்புபவைகளை மிகைபடப் புகழ்த

லும், கிடைத்துள்ளவைகளை இகழ்தலும் மானுடக் குணங்களிற் சில.

நம்மைச் சூழ்ந்துநிற்கின்ற, பிரகிருதியினின்றும், தூய்மைப்படுத்தி உயர்த்தும் காவியங்களினின்றும், பிறருடன் ஒத்து ஒழுகச்செய்யும் அன்பினின்றும், ஈச்வரனைத் தரிசிக்கச்செய்யும் பக்தியினின்றும் நம்முடைய மனதையும் ஹிருதயத்தையும் வேறுபடுத்தி வருந்துதல் பரிதபிக்கத்தக்க விஷயமன்றோ?

பக்தியற்ற மதம் மணமற்ற ரோஜாமலரை ஒக்கும்.

ஒருவனுடைய மேன்மைக் குணத்தை, அவனுடைய உடைமைகளும் பிரபலச் செயல்களும் நயமொழிகளும் உள்ளபடி அறிவிப்பனவல்ல; மற்று, அவனுடைய இனிய மொழிகளும், நேரிய நடத்தையின் செம்மையும், சலியா மனமும், அஞ்சாநெஞ்சமும், நீடித்து நிற்கவல்லதான நற்செயல்களுமே அதனைக் காட்டித் தரும்.

கலித்தொகை

[643-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 24

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கி, "நீர் பிரியின் நும் செயலைப் பீடிலார் தொடர்புபோலப் பலர்க்கும் எடுத்துக் காட்டித் தூற்றுவன தலைவிபால் பல உள" எனக் கூறி அவன் செல்லுதலைத் தடுத்ததைக் கூறுவது இச்செய்யுள்.

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுண் முதியவன் புணர்ப்பினு
லைவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ
லொள்ளுரு வரக்கில்லை வளிமக னுடைத்துத்தன்
னுள்ளத்துக் கிளைகளோ டுய்யப்போகு வான்போல
வெழூவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ
மழூவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத்தங்
குழூவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுர
மிறத்திரா லையமற் றிவணிலைமை கேட்டீமின்

மணக்குங்கான் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்காற் கலுழ்பானாக் கண்ணெனவு முளவன்றே
சிறப்புச்செய் துழையராப் புகழ்பேற்றி மற்றவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்

ஈங்குநீ ரளிக்குங்கா லிறைசிறந் தொருநாணீர்
நீங்குங்கா னெகிழ்போடும் வளையெனவு முளவன்றே
செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவ
ரொல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்புபோல்

ஒருநாணீ ரளிக்குங்கா லொளிசிறந் தொருநாணீர்
பாராட்டாக் காற்பசக்கு நுதலெனவு முளதன்றே
பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்

எனவாங்கு

யாநிற் கூறுவ தெவனுண் டெம்மினு
நீநற் கறிந்தனை நெடுந்தகை வானந்
துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின்
னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே.

(தரவு)

(வரி 1 - 12) வயக்குறு - விளங்குகின்ற, மண்டிலம் - கண்ணாடியினுடைய, வடமொழி பெயர் - வடமொழிப் பெயராகிய 'தர்ப்பணம்' என்பதை, பெற்ற - (உடன்) பெற்ற, முகத்தவன் - ஆனனன், (அஃதாவது 'தர்ப்பணானனன்' என்னும் திருதராட்டிரனுடைய) மக்களுள் - பிள்ளைகளுக்குள்ளே, முதியவன்-மூத்தவனாகிய துரியோதனனது, புணர்ப்பினால் - சூழ்ச்சியினால், ஐவர் என்று உலகு ஏத்தும் அரசர்கள் - ஐவர் என்று உலகத்தோர் புகழும் தருமபுத்திரர் முதலிய அரசர்கள், அகத்தர் ஆக - உள்ளிருப்பவராக, கைபுனை அரக்கு இல்லை - கையால் புனையப்பட்ட அரக்கு மாளிகையை, கதழ் எரி சூழ்ந்தாங்கு - விரைந்துசெல்லும் நெருப்புச் சூழ்ந்தாற்போல, களி திகழ் கடாஅத்த - களிப்பு விளங்குகின்ற மதத்தினையுடைய, கடுங்களிறு அகத்தவா - சிறந்த யானைகள் உள்ளே இருப்பனவாக, முளி கழை - காய்ந்த மூங்கிலையுடைய, உயர் மலை முற்றிய - உயர்ந்த மலையைச் சூழ்ந்த, முழங்கு அழல் - முழங்குகின்ற நெருப்பை, ஒள் உரு அரக்கு இல்லை-ஒள்ளிய உருவத்தினையுடைய அரக்கு மாளிகையை, வளி மகன் உடைத்து-வாயுபுத்திரனை வீமன் உடைத்து வழி செய்துகொண்டு, தன் உள்ளத்து கிளைகளோடு - தன் மனத்திற்குப் பொருந்தின சுற்றத்தோடு, உய்ய போகுவான் போல - தப்பிப் போகின்றவனைப் போல, எழு உறழ் தட கையின் - தூண் போன்ற பருத்த கைகளையுடைய, இனம் காக்கும் எழில் வேழம் - தம் இனத்தைக் காக்கும் அழகினையுடைய யானைகள், அழுவம் சூழ் புகை அழல்-(காட்டின்) பரப்பைச் சூழ்ந்த புகையையுடைய தழலின்கண், அதர்பட மிதித்து - வழியுண்டாக மிதித்து, தம் குழுவொடு - தம்முடைய திரளொடு, புணர்ந்து போம் - கூடிப் போகும், குன்று அழல் வெஞ்சுரம் - குன்றுகளும் வெப்பம் கக்குகின்ற வெய்யதாகிய காட்டை, இறத்திரால் - கடந்து செல்வீராயின், ஐய - தலைவரே, இவள் நிலைமை கேட்டீமின் - பின்னை இவளுடைய நிலைமையைக் கேட்பீராக.

முழங்குகின்ற நெருப்பை யானைகள் தழலின்கண் வழியுண்டாக மிதித்துப் போகும் என்பது கருத்து.

அழல் சூழ்ந்த அரக்கு மாளிகைக்குள் அகப்பட்டுக்கொண்ட வீமசேனன் தனது உடன்பிறந்தாரையும் தாயினையும் தூக்கிக்கொண்டு ஒரு வழிசெய்து வெளிப்பெயர்ந்ததுபோல அழல்சூழ்ந்த காட்டினின்றும் யானைகள் தம் தம் கூட்டங்களோடு நெருப்பிடையே வழியுண்டாக்கிக்கொண்டு வெளிப் பெயர்ந்தன என்பது கருத்து.

ஆனனம் - முகம்; தர்ப்பணானனன் - கண்ணாடி போலும் முகமுடையவன்.

தான் பிறரைப் பார்க்க இயலாததாய்த் தன்னைப் பிறர் பார்க்கின்ற தன்மை கண்ணாடியின் இலக்கணமாம்.

(தாழிசை)

(வரி. 13-16) உழையர்ஆ- ஒருவர் தம்மிடத்தே இருந்தாராக, சிறப்பு செய்து - அவர்க்குச் சிறப்புக்களைச் செய்து, புகழ்பு ஏற்றி - அவரைப் புகழ்ந்து வாழ்த்தி, அவர் புறக்கொடையே - அவர் திரும்பிப் போனவுடனே, பழி தூற்றும் - (அவரைப் பற்றிப்) பழிச் சொற்களைப் பேசுகின்ற, புல்லியார் தொடர்புபோல் - அற்பருடைய உறவு போல, மணக்குங்கால் - நீ கூடி இருக்குங் காலத்தில், மலர் அன்ன தகையவாய் - நீல மலர்களைப்போன்ற அழகினை உடையனவாயிருந்து, நீ சிறிது தணக்குங்கால் - நீ

சிறிது பிரியுங் காலத்தில், கலுழ்பு ஆனா - அழுதல் நீங்காத, கண் எனவும் உள அன்றோ-கண்கள் என்னும் சில பகைகளும் உள அல்லவோ?

புறங்கூறுவார்க்குக் கண்கள் உவமை.

மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(வரி. 17 - 20) செல்வத்துள் சேர்ந்து - ஒருவர்க்குச் செல்வம் உண்டானபோது அவருடன் நீங்காது சேர்ந்திருந்து, அவர் வளன் உண்டு - அவர் செல்வத்தை அனுபவித்து, மற்று அவர் ஒல்கு இடத்து-பின்னை அவர்தாழ்வுற்ற காலத்தில், உலப்பு இலா உணர்வு இலார்-அவர்க்கு உதவுதல் இல்லாத அறிவில்லாதவருடைய, தொடர்பு போல் - உறவுபோல, ஈங்கு நீர் அளிக்குங் கால் - இவ்விடத்தில் நீர் கூடி இருந்து அருள்செய்யுங் காலத்தில், இறை சிறந்து - முன்கையிலே சிறந்து விளங்கி, ஒரு நாள் நீர் நீங்குங்கால் - ஒரு நாள் நீர் நீங்குங்காலத்தில், நெகிழ்பு ஓடும் வளை எனவும் உள அன்றோ-கழன்று ஓடும் வளைகள் எனவும் சில பகைகளும் உள அல்லவோ?

உணர்விலார்க்கு வளைகள் உவமை.

(வரி. 21. - 24) பொருந்திய கேண்மையின் - இருவர் மனமும் பொருந்திய நட்பாலே, மறை உணர்ந்து - ஒருவருடைய ரகசியங்களை அறிந்து, அம் மறை - அந்த ரகசியங்களை, பிரிந்தக்கால் - அவர் நீங்கிய பொழுது, பிறர்க்கு உரைக்கும் - பிறர்க்கு வெளிப்படுத்தும், பீடு இலார் தொடர்பு போல் - பெருமை இல்லாதவர் உறவு போல, ஒரு நாள் நீர் அளிக்குங்கால்-ஒரு நாள் நீர் அன்பு செய்யும் பொழுது, ஒளி சிறந்து - ஒளி மிக்கு, ஒரு நாள் நீர் பாராட்டாக்கால்-ஒரு நாள் நீர் அன்பு செய்யாத விடத்து, பசக்கும்-பசலைநிறம் காட்டும், நுதல் எனவும் உளது அன்றோ - நெற்றி என்னும் ஒரு பகையும் உளது அன்றோ?

ஒளி - கலவியால் வரும் அழகிய நிறம். பசலைநிறம்- சுணங்கு.

(தனிச்சொல்)

என - என்று, ஆங்கு அசை.

(சுரிதகம்)

(வரி 26 - 29) யாம் நின் கூறுவது எவன் உண்டு - யாம் நினக்குக் கூறுகின்ற வார்த்தையால் என்ன பயன் உண்டு? எம்மினும் நீ நன்கு அறிந்தனை - எம்மைக்காட்டிலும் நீ அப் பகையுண்மையை நன்கு அறிந்துள்ளாய்! நெடுந்தகை - பெரியோனே! நின் அளி மாறு பொழுது - நினது அன்பு மாறும்பொழுது, இ ஆயிழை கவின்-இந்த ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையுடையாளது அழகு, வானம் துளி மாறும் பொழுதின் - மேகம் மழைத் துளி பெய்யாத காலத்தில், இ உலகம் போலும் - இவ்வுலகம் கெடுமாறு போலக் கெடும்.

காற்று மழை

139159

Shakespeare—"The Tempest"

[642-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4. களம் 1.

இடம்—ப்ராஸ்ப்பீரோவின் குகைக்கு எதிர்ப்புறம்.

ப்ராஸ்ப்பீரோவும், பர்டினண்டும், மிராண்டாவும் வருகின்றனர்.

ப்ராஸ்ப்பீரோ:—ஒல்லாத கடுமையுடன் யானுன்னை ஒறுத்தனெனாயினும், நீ பெறுகின்ற ஈடு அதனைநேர் செய்துவிடும் (1). என்னுடைய உயிரின் ஓர் நூலையே, எதன்பொருட்டு யான் உயிர்வைத்திருக்கின்றேனோ அதனையே, உனக்கு ஈந்துளேன் (2): அன்னவளை மீண்டு மோர்முறை நின் கரங்களில் நல்குகின்றேன் (3). நின் அல்லலெல்லாம் நானுன் காதலுக்குச் செய்த சோதனையேதான்; நீயு மச் சோதனையை வியக்கும்வகை தாங்கி நின்றனை (4). இதோ, விண்ணவர் முன்னர், இந்தவென் செல்வப் பரிசிலை உறுதிசெய்கின்றேன் (5) —ஏ, ஏ, பர்டினண்ட், மேம்படப்பேசி நான் அவளைப் போக்குகின்றேனென்று என்னை நோக்கிப் புன்னகை புரியாதே (6); மற்று, தன்பின்னே நொண்டிவரப் புகழெல்லாம் கடந்து அவள் முன்செல்லலாவதை நீயே காண்பாய் (7).

பர்டினண்ட்:—தெய்வத்தின் வாக்கிற்குமாறாக இதனை நான் மெய்யென நம்புகின்றேன் (8).

ப்ராஸ்ப்பீரே:—ஆயின், என்றன் பரிசில் என்னவும், தகைபெற வாங்கிய நின்றன் தேட்டமே என்னவும், என் புதல்வியை ஏற்றுக்கொள் (9). எனினும் ஒன்று. புனிதமாய சடங்குகள் அனைத்தும் தூய முறைப்படி முழுதும் முற்றுமுன் இவள்தன் கன்னிமுடிப்பைச் சிதைப்பாயாயின், இம் மன்றற்

(1) விறகுசுமப்பது போன்ற கடினமான காரியங்களைச் செய்வித்து உன்னை நான் வருத்தினேன். ஆயினும், அவ்வாறு உன்னை வருத்தியதற்கு ஈடாக என் மகள் மிராண்டாவையே தருகின்றேன்; ஆதலின், கஷ்டத்திற்கு நேரான பிரயோஜனமும் பெற்றவன் ஆகின்றாய். ஒல்லாத = தகாத. ஒறுத்தனென் = வருத்தஞ் செய்தேன்.

(2) மிராண்டாவை, தன் 'உயிரின் நூல்' எனக் கூறுகின்றான். என் உயிரே போன்றவள் மிராண்டா, என்பதன்றியும், "என் உயிரினை என் உடலோடு பிணித்துவைக்கும் நூல் போன்றவள்" என்ற கருத்தும் சிறக்கின்றது. மிராண்டாவின் பொருட்டே நான் உயிர் வைத்திருக்கின்றேன் - என்று இவன் பின்னுஞ் சொல்வது இக்கருத்தை வற்புறுத்துகின்றது.

(3) என்று கூறி மிராண்டாவின் கையைப் பிடித்துப் பர்டினண்டின் கையில் தருகின்றான்.

(4) நானுன்னை அல்லல் படுத்தினேன் என்றால், அது நான் உன்மீது கொண்ட பகையால் படுத்தியதன்று. நீ இப்பெண்ணின்பால் வைத்த காதல் மெய்க்காதலேயோ என்று சோதிப்பதற்காகவே இது செய்தேன். நீயும் அச் சோதனையில் தோற்காமல், அவ்வளவு வருத்தங்களையும் வீரமுடன், கண்டவர் வியக்கும்படி தாங்கிநின்று உன் காதலை மெய்ப்பித்தாய்.

(5) பரிசில் = வெகுமதியாக அளிக்கும் பொருள், இங்கு மிராண்டா. இவளை உனக்கு அளிக்கின்றேன் என்று சொல்லியதுமன்றி இப்பொழுது அச்சொல்லை, தெய்வங்கள் சாக்ஷியாக, உறுதிசெய்கின்றேன்.

(6) 'என் செல்வப் பரிசில்' என்று ப்ராஸ்ப்பீரோ மிராண்டாவைப் புகழ்ந்தது கேட்ட பர்டினண்ட் தானும் மகிழ்ந்து நகைசெய்தனன் போலும். இதுகண்ட ப்ராஸ்ப்பீரோ அச் சிரிப்பிற்கு வேறோர் குறிப்புண்டென்று கொண்டனன்போல், இது செப்புகின்றான். இவள் தகுதிக்கு மேல் இவளைப் புகழ்ந்து எப்படியாவது உன்மனைவியாகச் செய்துவிட வேண்டுமென்ற சூழ்ச்சியால் இவ்வாறு பேசுகின்றேன் என்று எண்ணி என்னை இவ்வண்ணம் எள்ளி நகைக்காதே - என்பது பொருள்.

(7) புகழெல்லாம் கடந்து செல்லும் பெருமையள் இவள். இவளைஎட்டமாட்டாமல் புகழும் பிறக்கிட்டு நொண்டி நொண்டியே வரவேண்டியதாகும்—என்பது பொருள்.

சேர்க்கையை வளர்ப்பதற் குரியவொன்றும் விண்ணவர் இனிது சொரியமாட்டார். அதனெதிர், மலட்டுப்பகையும், கரிக்கும் கண்ணுடை வெறுப்பும், விரோதமும், நீங்கள் இருவரும் வெறுப்புற உங்கள் பள்ளிச்சேர்க்கையில் அருவருப்புடைய களைகளைத் தெளித்துவைக்கும்; ஆதலின், ஹைறமெனின், தீவர்த்தி உம்மை ஒளிசெய்ய விரும்புவீராயின், அதனை அஞ்சுக (10).

பர்டினண்ட்:—அமைதிவாய்ந்த நாட்களும் அழகிய மக்களும், நீண்ட ஆயுளும், இப்பொழுதிருக்கும் அன்புடன், யான்எதிர்பார்க்கின்றேனாதலின், எங்கள் கெட்டதெய்வம் அறிந்துகாட்டவல்ல இருள் செறிந்த குகையேனும், செவ்வி சூழ்ந்த இடமேனும், வன்மை மிகுந்த குறிப்பேனும், பரிதிக்கடவுளின் பரிமாக்கள் காலிடறி வீழ்ந்தனவோ, இரவுதான் கீழே சங்கிலிகொண்டு கட்டப்பட்டிருக்கின்றதோ என்று நான் எண்ணற்கமைந்த அந்நாளின் உற்சவத்தின் கூர்மைமழுங்க, என் செம்மையை ஒருபோதும் மையலாக உருக்கமாட்டா (11).

ப்ராஸ்ப்பீரோ:—நன்று பேசினாய். எனின், இவ்வயினமர்ந் திவளோ டுரையாடுவாய்—என்ன, ஏரியல், ஊக்கமுடைய வென் ஏவலாள, ஏரியல்!

[ஏரியல் வருகின்றது]

ஏரியல்:—ஆற்றலுடை என் எசமானனுக்கு யாதோ விருப்பம்? ஈண்டு இருக்கின்றேன் யான்.

ப்ராஸ்ப்பீரோ:—நீயும், உன்னிற் றாழ்ந்த நின் துணைவரும் சற்றுமுன் உமக்கு இட்டிருந்த காரியத்தைச் செவ்விதின் நிகழ்த்தினீர். (12) அஃதனைய மற்றுமோர் தந்திரத்தில் யானுன்னைக் கையாள வேண்டியிருக்கின்றது. நினக்கு யான் அதிகாரம் கொடுத்திருக்கின்ற அக் கும்பலை, இங்கு இவ்விடத்திற்கு, சென்று நீ அழைத்து வா.(13) விரைந்து செய்யும்படி அவைகளைத் தூண்டு; என் கலையினது மாயக்காட்சியின் பெருமை சிலயான் இம் மணமக்கள்கண்களுக்குஅளிக்கவேண்டும்: அதனை வாக்களித்திருக்கின்றேன். அவர்களும் என்னின்றதனை எதிர்பார்க்கின்றனர்.

ஏரியல்:—இப்பொழுதேயோ?

ப்ராஸ்ப்பீரோ:—ஆம், கண்கொட்டுமுன்.

ஏரியல்:—'வா' என்றும் 'போ'வென்றும் நீ சொல்லி, இருமுறை உயிர்த்து, 'அப்படி அப்படி' என்பதன் முன், ஒவ்வொன்றும் தன் விரல்மேல் குந்தி நடந்து, மூஞ்சியு முகமும் காட்டியவண்ணம் இவ்வயின் வந்து சேரும். (14) என்பால் அன்பு உடையையோ, தலைவ? அல்லையோ? (15).

ப்ரர்ஸ்ப்பீரோ:—அருமையாக(16). இதோ, வா, என் ஏரியல்! ஆவி ஒன்று குறைவதனினும் அதிகமே கொண்டு வா. (17) சுருசுருப்புடன் வந்து தோன்று—வேண்டா நாக்கு; எல்லம் கண்கள்; மௌனமாயிரு. (18)

[மெல்லிய இசை கேட்கின்றது.]

ஐரிஸ் வருகிறாள். (19)

ஐரிஸ்:—உதாரம் மிகுந்த பெருமாட்டி, ஸிரிஸ்ஸே, கோதுமையோடு தானியங்கள் பலநிறைந்த செழிப்புடைய உன்றன் வயல்களையும், அரித்துத் தின்னும் ஆடுகள் வாழும் புல்வளர் மலைகளையும், அவைகளை வளர்க்க வைக்கோல் பரப்பிய பரப்புத்தரையையும், நீரர மகளிர்க்குத் தூய்மைமிகு கோதையாம்வண்ணம், உன் கட்டளைப்படி நீர்மலி ஏப்ரல்மாதம் மலர்பல கொண்டு கோலஞ்செய்த ஆற்றங்கரைகளையும், காதலி கைவிட வந்த இளைஞன் தங்கவிரும்பும் நிழலுடை நின்சோலைகளையும்,கொடிபடர் பந்தரையும், நீ காற்றுவாங்கு மப் பாறைமிறுகிய கடலின் ஓரத்தையும்—இவைகளை விட்டு நீ, இங்கு இப் புற்றரைமீது இந்த விடத்தே, விண்ணின் அரிசி, அன்னவள் நீருடை வளைவும் தூதியும் ஆவேன் யான், தன்னுடன் வந்து விளையாட உனக்குக் கட்டளையிடுகின்றாள். அவள்தன் மயில்களும் விரைவுடன் பறக்கின்றன. வருக, செல்வம்சால் ஸிரிஸ்ஸே, உவகைகூர இவ்வயின்வருக. (20)

(8) தெய்வமே வந்து இவள் புகழ் பெரியது அன்று என்றுகூறினாலும், நானே அதனை மறுத்து நின்னுரையே மெய்யெனக் கொள்வேன் - என்பது பொருள்.

(9) பரிசில் = நன்கொடையாகப் பெற்ற பொருள். தேட்டம் = ஈட்டிய பொருள். இம் மிராண்டா, உனக்கு நானளிக்கும் நன்கொடையாவதுமன்றி உன்னுடைய தகுதியினால் நீ பெருமையுற ஈட்டிய பொருளும் ஆவாள். ஆகையால், அவள் எல்லாவகையிலும் உனக்கு உரியவள்-என்பது பொருள்.

(10) கல்லியாணச் சடங்குகள் விதிப்படி நடக்குமுன் காமத்திற் கிடங்கொடுத்துக் கூடிவிடுவீர்களாயின், இழிவுடைய மக்களைப் பெற்று அருங்கேடு அடைவீர், என்று ப்ராஸ்ப்பீரோ எச்சரிக்கை செய்கின்றான்.

கன்னி முடிப்பைச் சிதைத்தல் = கன்னிமை கழியும்படி செய்தல். பகையும் வெறுப்பும் விரோதமும்...பள்ளிச் சேர்க்கையில்...களைகளை...தெளித்துவைக்கும்-என்று முடித்துக்கொள்க. களைகள் - நற்பயிரல்லாமல் வயலில் முளைக்கின்றவை. உங்கள் படுக்கையிலிருந்து நன்மக்கள் என்னும் பயிர் முளைக்காமல், அருவருப்புடைய களைகள் போன்ற துஷ்டப்பிள்ளைகள் தாம்விளையும்--என்பது பொருள். உங்களுக்கிடையே பகை வெறுப்பு விரோதம் முதலியன புகுந்து உழக்க இன்பம் இழந்து துன்பத்திற் கிடமான பிள்ளைகளைப் பெற்றுப் பாழாவீர் என்பது கருத்து. ஹைறமென் = கல்லியாணத்திற்கு அதிதேவதையாகக் கருதப்படும் ஒரு தெய்வத்தின் பெயர். அத்தெய்வத்தின் ஒளியின்கீழ் நீங்கள் வாழவிரும்பினால், சடங்குகள் முடிவதன்முன் சேர்வதற்கு அஞ்சுக என்பது பொருள். ஒளியின்கீழ் வாழ்தல் - அருள்பெறுதல்.

(11) குகையேனும், இடமேனும் குறிப்பேனும்,...உற்சவத்தின் கூர்மை மழுங்க...என் செம்மையை மையலாக உருக்கமாட்டா - என்று முடித்துக்கொள்க. மையல் = காமவிகாரம். நான் செம்மை பிறழ்ந்து மையல்வாய்ப்பட்டு ஒழுக்கம் கெடமாட்டேன் - என்பது கருத்து. ஒருவருங் காணாத இருட்டுக் குகையி லிருப்பினும், ஒருவரும் வராத இடத்தில் தனியிருப்பினும், காமக்குறிப்புக்கள் எத்தனை தோன்றினும், நான் செம்மை இழக்கமாட்டேன் - என்கின்றான். கெடுக்கப் புகுந்த தெய்வம், காலம் இடம் வசதி முதலியவைகளை இக்காரியத்திற்கு அமைத்துத் தரலாமாயினும் நான் மதிகெட்டு இக்காரியம் செய்யமாட்டேன்.

அந்நாள் = கல்லியாண நாள். மணமக்கள் அன்றைய இரவுப்பொழுதை ஆர்வமுடன் எதிர்பார்த்திருக்க, பகற்பொழுது கழியாமல் ஊழியாய் வளராநிற்கும். குதிரைகள் காலிடறி விழுந்துதான் கதிரவன் ஒழியாமல் நிற்கின்றானோ, அல்லது இரவுதான் வாராதபடி யாரேனும் பாதளத்தில் அதனைச் சங்கிலியிட்டுக் கட்டிவிட்டனரோ, என்று நான் எண்ணி ஏங்கிஏங்கிப் பின் பள்ளிசேர்தலே, காத்திருந்த ஆர்வம்பற்றி, கிடைத்த இன்பத்திற்குக் கூர்மை அளித்ததாகும். (கூர்மை - இங்கு, புதுமை என்னும் பொருட்குறிப்புடையது). இவ்வாறு இன்றி நான் முன்னரே கூடிவிட்டேனாயின் அந்த ஆர்வத்தின் சுவை மழுங்கினவனாவேன். அது மழுங்கும்படி நான் செம்மை பிறழமாட்டேன்காண் - என்பது கருத்து.

(12) அலான்ஸோ முதலியவர்களுக்கு முன் ஓர் பொய் விருந்து பரப்பிப் பின் அதனை மறையச்செய்ததைக்குறிக்கின்றான்.

(13) கும்பல் = ஆவிகளின் கூட்டம். ஏரியலுக்கு அவைகளின்மீது அதிகாரம் கொடுத்திருக்கின்றான் ப்ராஸ்ப்பீரோ.

(14) தான், தன்னுடையஆவிக்கூட்டங்களை எவ்வளவு விரைவில் கொண்டு சேர்க்கக்கூடும் என்பதை ஏரியல் இப்படிக் கூறுகின்றது. ஒவ்வொன்றும்- ஒவ்வொரு ஆவியும். மூஞ்சியும் முகமும் காட்டல் = 'அழகு' அல்லது 'நங்கு' காட்டுதல்.

(15) ப்ராஸ்ப்பீரோவின் அதிகாரத்திலிருந்தும் தான் விடுதலை அடையவேண்டும் என்ற ஆசை ஏரியலுக்கு அதிகம் இருப்பதால், அவ்விடுதலையை அளிப்பதற்குரிய அன்பு அவன் தன்பால் வைத்திருக்கின்றானோ, அல்லது, வேலைவாங்கிக்கொள்வதற்கு ஏற்ற வோர் ஏவலாளனாக மாத்திரம் தன்னைநடத்துகின்றானோ, என்கின்றசந்தேகம் தெளிந்துகொள்ளும்படி, ஏரியல் மெல்லக்கேட்கும் இது மிகவும் அழகாக அமைந்திருக்கின்றது.

(16) அருமையாக அன்பு பூண்டுள்ளேன் - என்பது சொல்லெச்சம்.

(17) நடத்தவேண்டிய காரியத்திற்கு அவசியமான ஆவிகள் குறையக் கொணரமால், சில அதிகமே அழைத்துவா - என்பது பொருள்.

(18) ப்ராஸ்ப்பீரோ ஜாலத்தோற்றம் காட்டப் போகின்றானாகையால், ஒன்றும் பேசாமல் மௌனமாக எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும்படி பர்டினண்டிற்குக் கட்டளையிடுகின்றான்.

(19) ப்ராஸ்ப்பீரோ தன் ஆவிகளைக்கொண்டு ஒருசிறு கூத்து நடத்திக்காட்டுகின்றான். இத்தகைய கூத்துக்கள் ஷேக்ஸ்ப்பியர்காலத்துஇங்கிலாந்தில்,செல்வமுடையோர் வீட்டுக் கலியாணக் கொண்டாட்டங்களில் ஒன்றாக நிகழ்வதுவழக்கம். இக் கூத்துக்கள் பெரும்பான்மை புராணக் கதைகளைத் தழுவியனவாய், தேவதைகளின் செய்கைகளைக் காட்டுங் குறிப்புடன் நடத்தப்படும். அக்கூத்துக்களில் வேடம்பூண்டு நடிப்பவர் மனிதர். ப்ராஸ்ப்பீரோ, தன் ஏவல் ஆவிகளை வேடங்கொண்டு வரச்செய்து இந்த இடைக்கூத்தை நடிக்கவைக்கிறான்.

ஐரிஸ் - இக்கூத்தில் வருகின்றவோர் பாத்திரம். உரோமர் புராணத்தின்படி, ஐரிஸ் என்பவள் வானவில்லிற்கு அதிதேவதையாவாள். தேவர்களுக்குத் தூதுசெல்வது இவள் தொழில். சிறப்பாக, விண்ணவர் அரசியும் ஜுபிடர் என்னும் அமரர் வேந்தனுக்குத் தேவியுமாகிய ஜுனோ என்பவளுக்கு தூதியாக அமைந்தவள். இவள் முதலில் வந்து ஸிரிஸ் என்னும் தேவதையை வரும்படி அழைக்கிறாள். ஸிரிஸ் பயிர்களுக்கும். மற்று, நிலத்திலிருந்து விளையும் செல்வங்கள் அனைத்திற்கும் அதிதேவதை.

(20) ஸிரிஸ்ஸே, உன் இருப்பிடமாகிய வயல்கள், மலைகள், ஆற்றங்கரைகள், சோலைகள், கடற்கரைகள் அனைய இடங்களை விட்டு, இங்கே வந்து தன்னுடன் உல்லாசமாயிருக்கும்படி, வானவில்லாகிய என்னுடைய தலைவியும், விண்ணவர்க்கு அரசியுமாகிய ஜுனோ என்பவள் கட்டளையிடுகின்றாள். இங்கு அவள் வந்துசேர அவள் தேரிற் பூட்டிய மயில்களும் வேகமுடன் புறப்பட்டுவிட்டன. ஆகையால், நீ கடிது இவண் வருக - என்பது இதன் பொருள்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[633-வது பக்கத் தொடர்ச்சி]

வெல்வதும் பாவமா வேதங் கூறுமோ.

தன்னைக் காக்கவந்த ஜடாயுவும் சிறையறுந்து விழக் கண்ட சீதை அதன்பால் "ஓடிவந்து அதனைக் கட்டிக்கொண்டு துக்கத்தால் பின்வருமாறு புலம்பினாள் என்று வான்மீகி முனிவர் கூறுவார்—

"கண் துடித்தல், தோள் துடித்தல், கனவு, பறவைகளைக் காணல், பறவைகள் கூவுதல் முதலிய சகுனங்கள் மனிதர்களுக்கு உண்டாகும் நன்மை தீமைகளைத் தெரிவிக்கின்றன. ஓ இராமா, நீர் உமக்கு வந்திருக்கும் இப் பெருந் துக்கத்தை இன்னும் அறிந்துகொள்ளவில்லை. உமக்கு முன் அபசகுனமாகப் பறவைகளும் விலங்குகளும் சஞ்சரிக்கவும் அன்பினால் என்னைக் காப்பாற்ற வந்த இப் பறவைமன்னன் எனது பாக்கியமின்மையால் வதையுண்டு பூமியில் கிடக்கின்றான். ஓ இராம ஓ லக்ஷ்மணா, என்னைக் காப்பாற்றுங்கள்" என்று சொல்லி அவ்வுத்தமியானவள் பயத்தால் நடுங்கிக்கொண்டு தனக்குச் சமீபத்தில் இருப்பவர்களைக்கூப்பிடுவதுபோல் தூரத்திலிருக்கும் இராமலக்ஷ்மணர்களைக் கூப்பிட்டுக் கதறினாள்.

இவ்வுத்தமிவேறு எது சொல்லினும், ஜடாயுவிற்கிரங்கிப் புலம்பிய பான்மையொன்றும் இம்மொழிகள் அதிகம் காட்டித்தரவில்லை. சகுனசாத்திரத்தின் அறிவு சிறிது தனக்குண்டென்பதையே தெரியக்காட்டினாள். தன்னாலேயன்றோ சடாயு மாளநேர்ந்தது என்பதன்று அவள் வருத்தம்; தன்னைக் காக்கின்றவரையில் அப்பறவை உயிர் வைத்திருப்பதற்கு வேண்டிய பாக்கியம் தனக்கு இல்லாமற் போயிற்றே என்பதை நினைத்தே வருந்துகின்றாள். இவனும் இறந்தானாதலின், இனியேனும், "ஓ இராமா, ஓ இலக்ஷ்மணா, என்னைக் காக்க வாருங்கள்" என ஓலமிடுகின்றாள். எனின் இவள் இரங்கியதெல்லாம் தன்னைக் குறித்தேயன்றி வேறன்று. இதனெதிர், குலக்கோசலையின் மாமருகி கம்பர்நூலுள் புலம்புமாறு காணலாம்—

பின்னவ னுரையினை மறுத்துப் பேதையேன்
அன்னவன் றனைக்கடி தகற்றி னேன்பொரு
மன்னவன் சிறையற மயங்கி னேன்விதி
இன்னமு மெவ்வினை யியற்று மோவெனா

[அறிவில்லாத நான், இலக்குமணன் வார்த்தையை மறுத்து, அவனை விரைவில் என் காவலினின்று நீங்கும்படி செய்தேன். போர்செய்த இப் பறவைவேந்தனது சிறகு அறக்கண்டு திகைப்படைந்தேன். என் விதியானது இன்னமும் என்னவென்ன செய்ய இருக்கின்றதோ, என்று]

மாழ்கினாள்அவள். பெருந்தகைப் புனிதன் இலக்குவனைக் கடிது போக்கியபழி அடுத்துவந்ததென் றிவள் உணர்வதால் உள்ளம் நனி தூயவளாயினாள். கழிவிரக்கங் கொண்டு கலுழுமித் தன்மையில் இராமனும் இவளை ஒக்கின்றான். பிற்றைநாள் இலங்கைவெங்களத்தில் இந்திரசித்தின் பிரம்மாத்திரத்திற் கிலக்காகி மாய்ந்துகிடந்த வானரவீரரைக் கண்ணுற்றிரங்கிய இராகவன்,

புன்றொ ழிற்புலை யரசினை வெஃகியென் பூண்டேன்
கொன்றொ றுத்தனெ னெந்தையைச் சடாயுவைக்
[குறைத்தேன்

இன்றோ றுத்தனெ னித்தனை வீரரை யிருந்தேன்
வன்றோ ழிற்கொரு வரம்புமுண் டாய்வர வற்றோ.

[அற்பத் தொழிலாகிய இழிந்த அரசிற்கு ஆசைப்பட்டு (முன்னர்த் தயரதன் தந்தபோது அதனை வேண்டாவென மறுக்காமல் ஏற்றுக்கொண்டதால்) என்ன இலாபம்பெற்றேன். அதனால், என் தந்தையைக் கொன்று தீர்த்தேன், ஜடாயுவையுங் கொன்று தீர்த்தேன், இன்றைக்கு இத்தனை வீரர்களைக் கொன்று தீர்த்தேன். நானோ இருக்கின்றேன். அரசிற்கு ஆசைப்பட்ட அந்த என் கொடிய காரியத்தின் விளைவாக நேரக்கூடிய கேடுகளுக்கு ஓர் எல்லையு முண்டோ.]

எனத் தற்பழி சுமத்திக்கொள்ளுங்கால், வெஃகாத அரசினை வெஃகினானெனப் பொய்யும் புகலப் புகுந்து புலம்புவதால் சீதையையும் அத்திறத்தில் விஞ்சுகின்றானென மதித்தல்வேண்டும். எனினும் அறத்தின் மூர்த்தியாகிய இராமனுக்கு அங்குத் தோன்ற மாட்டாச் சந்தேகமொன்று இங்குச் சீதைக்குத் தோன்றலாயிற்று:—

அல்லலுற் றேனைவந் தஞ்ச லென்றவிந்
நல்லவன் றோற்பதே நரகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ வறமென விரங்கி யேங்கினாள்.

[இடுக்கண் அடைந்த என்னருகு வந்து அஞ்சாதே என்ற இந்த நல்ல சடாயு தோல்வியடைவதோ! நரகத்திற்கு இலக்காகி நிற்கின்ற இந்த இராவணன் வெல்வதோ! அல்லது, யாரையும் வெல்வது எந்நாளும் பாவமே என்று கருதி இச்சடாயு தோல்வி பூண்டனனோ! பாவம் ஒருபோதும் தருமத்தை வெல்லாதென்று விளம்புகின்ற வேதமே பொய்யாய்விடுமோ! அறம் என்பதே ஒன்றுஇல்லையோ! என்று மனமுளைந்து ஏக்கமடைந்தாள்.]

தீயவர் தலையெடுக்க நல்லவர் ஒடுங்குமாபோல் தோன்றுமிவ் வுலகநிகழ்ச்சிகளைக் காண்கின்ற சிந்தனையாளர் எவரும் நாடோறும் நூறுநூறுமுறைகொள்ளாமற்றீராத ஐயங்களைச் சானகி இங்குக் குறித்துக் கூறுகின்றாள். முன்னர் இராவணனோடு வாதித்தபோது, "மீளருந் தருமந்தன்னை வெல்லுமோ பாவம்" என்ன இப்பெருமகள் கருத்தினளவில் கொண்டிருந்த உறுதியானது, சடாயுவின் வீழ்ச்சியாகிய இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து நோக்குங்கால், "இல்லையோ அறம்" என இரங்கித் தளர்கின்றது. சடாயுவோ, "வலியின் தலை தோற்றிலன், தெய்வவாள் இவனை நலிந்ததன்றியும், அவன் வாழ்க்கை நாளும் மெலியுங் கடைசென்றுளது, ஆகலின் வீழ்ந்தான்" என்று கம்பர்பிரான் நமக்குக் கற்பிக்கின்ற தேற்றரவினைச் சீதைக் கேட்ககிலாதவளாதலின் இவ் வையமே அவள்பால் எஞ்சுதல் வேண்டும். அதுவும் நன்றே. இல்லையேல், ஐயத்தின்மீதோர் ஐயமாக அவள், "வெல்வதும் பாவமாமோ" என்று கேட்டுக்கொண்ட அக் கேள்வி நம் காதிற்கு எட்டாமற் போய்விடும். உண்மையை அயிர்ப்பதே ஐயமெனப்படுமாயினும், எல்லா ஐயத்திலும் ஓரளவு உண்மையும் இருக்கின்றது. நல்லாறெனினும் வெல்லல் தீது ஆயினும் ஆகலாம். வெல்வது கிடக்க, தீமையை எதிர்ப்பதும் தக்கதோ அன்றோ யாரறிவார்! "நிலையில்லாத் தீவினையும் நீ தந்ததன்றே" என்று இந்திரன்முன் எம்மையாளுடைய இராமபிரானைக் கேட்ட கேள்வி உண்மையையே தேற்றுவதாயின், தீமையை எதிர்ப்பதும் வெல்வதும் ஈசுவரனது சித்தத்திற்கு விரோதமான பாவமென நிற்றலும் இயலும். அறத்தினை ஆற்றுதல் மட்டுமே மாந்தர் கடனாக, மறத்தினை எதிர்த்தல் முறைமை யன்றுபோலும். இத்தகைய சிந்தனை இயல்பற்றதன்று. "தீமையை எதிர்க்காதே" (resist not evil) என்று வழங்கும் கிறிஸ்தவ வாக்கியம், "வெல்வதும் பாவமோ" என்ற இச் சீதையின் சொற்களோடு சேர்ந்து இத்தகைய பற்பல எண்ணங்களை எழுப்பித்தர வல்லதாகின்றது. கடவுட்படையும் ஆயுளின் தேய்வும் அன்றி, தீமையை எதிர்த்தல் தகாதென்பதை நினையாமல் இராவணனுடன் போர் புகுந்த ஜடாயு, இடையிலே இது பாவம் என்பதுணர்ந்து, வெற்றியால் அப்பாவத்தைப் பின்னும் பெருக்காமலும், துவக்கிய பாவத்திற்குக் கழிவாயாகவும் தோற்றுவீழ்ந்ததோ என்று சிந்தித்த சீதை, அதுவே நேரெனத் தேறினாள் என்றெண்ணும்படி, பின்னரும் அவள்,

நாணிலே னுரைகொடு நடந்த நம்பியீர்
நீணில யறநெறி நின்றுளோர்க்கெலாம்
ஆணியை யுந்தையர்க் கமைந்த வன்பனைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினாள்

[வெட்கமற்றவளாகிய என்னுடைய வார்த்தையை மதித்து மானின்பின்னும், மானின்பின் சென்றவன் பின்னும், நடந்த இராம இலக்குமணர்களே, என்றும் அழிவில்லாத நீண்ட அறநெறியைக் கடைபிடித்திருப்பவர்களுக்கெல்லாம் உரையாணிபோன்றவனும், உங்கள் தந்தைக்கு ஏற்ற நண்பனும் ஆகிய சடாயுவைக் காண்பதற்கு வாருங்கள், என்று கலங்கி அழுதாள்]

என வரும் செய்யுளும் நிற்கின்றது. முன்னுரைத்த கருத்தின்படி தீமையை எதிர்த்ததே பிழையெனவுணர்ந்து வெல்லாமல் தோற்ற பான்மையால் சடாயு நீணில அறநெறி நின்றுளோர்க் கெல்லாம் உரையாணி ஆயினவாறு இங்குச் சீதையின் வாயினால் இயம்பப்பெற்றதென்று எண்ணலுங்கூடும். ஆற்றலுக்கும் அன்பிற்கும் இன்றிச் சடாயுவை அறத்திற்கே ஆணியென அழைத்தபெற்றி அருமை வாய்ந்தது. 'நல்லறமூர்த்தியன்ன' தயரதனுக்குஇவன் 'அமைந்த' நண்பனாயதும் இவ் வறத்தின் இயைபுடைய திறத்தினால் ஆதல்வேண்டும். கைகேசியைக் கடிந்தகற்றி யிருக்கலாமாயினும் தயரதன் அதுசெய்யாமல்தோற்றனன்.

இனிச் சீதை தன்னாற் பிறர்க்கு நேர்ந்த பழியை நினைத்து வருந்துவாளாகி,

கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையி னேன்வந்த
இற்பழி யுண்டதென் றிரங்கி யேங்கினாள்

[கற்பினின்று பிறழாத உறுதியைப் பூண்டவளாயினும், அழகு குறையாத வலிமை வாய்ந்த போர்வல்ல இராமனது வில் பழி அடைந்த இது பாவியாகிய நான் புகுந்த குடிபழியடைந்ததன் தொடர்ச்சியேஎன்று வருந்தி ஏங்கினாள்]

ஏங்கிப் பின்,

எல்லியல் விசும்பிடை யிருந்த நேமியாய்
சொல்லிய லாய்நெறி தொடர்ந்த தோழமை
நல்லிய லருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதி யோவெனப் பொருமிப் பொங்கினாள்

[ஒளி பொருந்திய விண்ணுலகிலே இருக்கின்ற தயரத சக்ரவர்த்தியே, ஆய்ந்து சொல்லப்பட்ட அன்புநெறி வாய்ந்த நட்புக்கு உரிய தன் நற்கடன் கழித்த இவ்வுத்தமனை நீ கட்டியணைத்து ஏற்றுக்கொள்வாயோ, என்று விம்மி அழுதாள்]

இவ்வாறு அழுகின்ற சானகியையும் சிறையொடிந்து கிடக்கின்ற சடாயுவையும் கண்ட இராவணன், தன் தேர் அழிந்து கிடக்கின்றதாதலின், சீதையை அவளிருந்த மண்ணோடும் தன்தோளிற்கொண்டு விண்ணிடையெழுந்து போவதுநோக்கி எருவை வேந்தன் மனம்மிக மாழ்கிச் சில சொல்லலாயினான்—

வந்திலர் மைந்தர்நம் மருகிக் கெய்திய
வெந்துயர் துடைத்தன ரென்னு மெய்ப்புகழ்
தந்திலர் விதியினார் தரும வேலியைச்
சிந்தினர் மேலினிச் செயலென் னாங்கொலோ

[என் மைந்தர்களாகிய இராமலக்ஷ்மணர்கள் இன்னும் வந்தாரல்லர். வந்து, என் மருமகளாகிய சீதைக்கு நேர்ந்த கொடிய துன்பத்தை நீக்கினார் என்னும் மெய்யான புகழை எனக்குக் கொடுத்தாரல்லர். இதற்கிடையில், விதியோ, தருமத்தின் வேலியைச் சிதைத்துவிட்டது, இனி யான் என்ன செய்யக்கிடக்கின்றது]

வெற்றிய ருளரெனின் மின்னி னுண்ணிடைப்
பொற்றொடிக் கிந்நிலை புகுதற் பாலதோ
உற்றதை யின்னதென் றுணர கிற்றிலேன்
சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ

[வெற்றியுடைய வீரர் இருப்பாராயின், மின்போன்ற நுண்ணிய இடையையும்பொன்னாலாகிய வளையல்களையும் உடைய சீதைக்கு இந்தக் கதி வரக்கூடுமோ! நிகழ்ந்தது இன்னதென்றுகூட எனக்கு விளங்கவில்லை. சிறிய தாயாகிய கைகேசி துவக்கிய வஞ்சனையானது இவ்வாறுமுடித்துக்கொண்டு போகின்றதோ.]

தாங்கற்கரிய கொடுமைகள் நிகழுந்தோறும் கைகேசியின் நினைவு வாராதொழிதல் அரிது. எனினும் ஓர் அரக்கன் வலியையும் ஓர் அரிவையின் வஞ்சனையும் இராமன்பால் என்னாம் என்று ஐயுற்று,

பஞ்சணைப் பாம்பணை யாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே யிராம னாதலால்
வெஞ்சின வரக்கனாற் வெல்லற் பாலனோ
வஞ்சனை யிழைத்தனன் கள்ள மாயையால்

[ஆதிசேடனாகிய படுக்கை பஞ்சுமெத்தைபோல் அமையச் சயனம் செய்யும் மைபோன்ற நிறமுடைய திருமாலே இந்த இராமனாகத் தோன்றியிருப்பவன் ஆகையாலே, இக்கொடிய கோபமுடைய அரக்கனால் வெல்லப்படுவானோ? ஆகையாற்றான் கள்ளமுடைய மாயைகளால்| இந்த வஞ்சனையைச் செய்தான்]

என்று விளம்புங்கால் சடாயு யாது தெளிந்தனன் என்பது செவ்விதின் விளங்கவில்லை. ஈசுவரனது சித்தத்திற்கு மாறாக நடந்த இராவணன் கொடுமையே இதுகாறும் வென்றுநிறைவேறுவதுபோல் தோன்றினாலும், அவனை அழித்தல் பொருட்டே மாமாயனாகிய திருமால், தன்தேவியைத் தான் பறிகொடுத்தது போன்றவோர் வஞ்சனையை இழைத்தானோ எனக்கருதவுந் தரும்.

அண்ணல் வெல்வது திண்ணமாயினும்அதற்கிடை அப் பெண்ணின் தூய்மை யாவதாம் என அஞ்சிய இப்புள்ளரசு,

வேரற வரக்கரை வென்று வெம்பழி
தீருமென் சிறுவனுந் தீண்ட வஞ்சுமால்
ஆரியன் றேவியை யரக்க னன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால்

[என் மைந்தனாகிய இராமனும், அரக்கரை வேரோடு வென்றழித்துத் தன் கொடிய பழியைத்தீர்த்துக் கொள்வான். நல்ல தாமரையில் வீற்றிருந்து உலகங்களைப் படைத்த பிரம்மதேவன் (நீ மாதரை வலியப் புணர்ந்தால் உன் தலை வெடித்திடுக) என்று இட்டிருக்கின்ற அந்தத் தப்பமுடியாத சாபத்தால், இராமன் தேவியை இவ்வரக்கன் தீண்டுவதற்கு அஞ்சுவாள்]

எனத் தேறிச் சீதையின் கற்பினுஞ் சலியாத உறுதியுடையவன் ஆதலின்,

அஞ்சிறை குருதியா லழிந்து சோர்வுற
வஞ்சியை மீட்கிலே னென்னு மானமுஞ்
செஞ்செவே மக்கள்பாற் சென்ற காதலும்
நெஞ்சுறத் துயின்றன னுணர்வு நீங்கலான்

[அழகிய இறகுகள் இரத்தம் பெருக அழிந்து தான் தளர்ச்சி யடையவும், சீதையைத் தான் மீட்க மாட்டாமையால் உண்டான வெட்கமும், இராம இலக்குமணர்பால் சென்று பொருந்திய அன்பும், மனத்தில் தங்க, உணர்வு நீங்காமல் துயில் போயினான்]

இராவணனும் சீதையைக் கொண்டுசென்று இலங்கையில் கொடிய வல் அரக்கிகளுக்கிடையே அசோக வனத்தில் சிறைவைத்தான்.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[628-வது பக்கத் தொடர்ச்சி]

வ

2016 வக்கிரங் கொடுமையு மடங்கலும் வட்டமும்
ஈனமும் போக்கு மியம்ப லாகும்.

2017 வங்கம் வெள்ளீயமுங் கருத்து நாவாயும்
வழுதலை யுமென வழங்கினர் புலவர்.

2018 வசியே கூர்மையும் நட்பும் வாளும்
[1]வடுவுந் திரட்சியும் வருட்டலுங் குற்றமும்.

2019 வசந்தன் மதனு மொருவா னரமும்
தென்றலு மெனவே செப்ப லாகும்.

2020 வசந்தம் புரந்தரன் மாளிகைப் பெயரும்
வசந்த காலமும் வழங்கினர் புலவர்.

2021 *வசித்தல் வாசமுந் தங்கலு மாகும்.

2022 வச்சிரஞ் சதுரக் கள்ளியுங் குலிசமும்
வயிரமு மெனவே வழங்கினர் புலவர்.

(பிரதி)-[1] பொன்னு மணியு மறிவும் பழிப்பும் - தரையு மெனவே சாற்றினர் புலவர்.

* இச் சூத்திரம் ஒரு பிரதியில் இல்லை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக ,,	0-12-0
பிருங்காமலக ,,	0-12-0
ஸ்திரீகளுக்கு	
ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மேடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்ட்ராலகல்

ஜ்வரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

2023 வசதி மனையும் வளம்பொரு மிடமும்
ஊரு மெனவே யுரைக்க லாகும்.
2024 வசுவக் கினியுந் தேவரும் பொன்னும்
ஆன்கன் றும் பொருளும் கிரணமு யாகும்.
2025 வஞ்சி மேற்செலவு மோரூரும் பாவும்
வல்லியும் பெண்ணும் வஞ்சிப் போனுமாம்.
2026 வஞ்சகம் பொய்யும் வாளுங் கபடமும்.
2027 வஞ்சனை மாயையும் பொய்யும் வஞ்சகமும்.
2028 வடகஞ் சுண்டாகியுர் மத்தவாளமும் தோலும்.
2029 வடவை பெண்ணெருமையும் பெண்குர கதமு
வடவைத் தீயும் பிடியா னையுமாம்.
2030 வட்டி வட்டிலுங் கூடையும் வழியும்
புட்டிலு மெனவே புகல லாகும்.
2031 வட்கல் நாணுஞ் சமழ்த்தலுங் கேடும்.
2032 வடுகு [2]பாடையும் மருதயாழ்த் திறமும்
இந்தள முமென வியம்பினர் புலவர்.
2033 வட்டம் பரிசையும் பாரா வளையமும்
தூசுங் கைமணியுங் குட்டமுஞ் சாலும்
ஊர்கோளுந் தாழ்வும் வட்டமுந் திகிரியும்.
2034 வட்டணை [3]யறுத்தலு மொத்தலு மாகும்.
2035 வடுவே செம்புந் தழும்புங் கூர்மையும்
வடுவு மழகும் பிஞ்சுங் குற்றமும்.
2036 வடிவு நிறமு மழகு முறுப்பும்.
2037 வடமே யாலுங் கயிறு மணிவடமும்.
2038 வண்டு பூசமுங் குற்றமும் வளையும்
சங்கும் வாளியு மப்பமும் வண்டும்
பழுதையு நூலும் மாதர்விளை யாடலும்.
2039 வணங்கல் வளைதலுந் தாழ்தலு மாகும்.
2040 வணசை சந்தனமும் சாந்து மாகும்.
2041 வண்மை வளமையு மீகையும் வலியும்
வாய்மை புகழும் வகுத்தனர் புலவர்.
2042 வண்டல் மணல்வண்டலு மாதர்விளை யாட்டும்.
2043 வண்ணஞ் சாந்தமும் வளைதலும் பண்பும்
கவியி னோசையுங் கழறினர் புலவர்.
2044 வதுவை கலியாணமு நாற்றமும் வாசமும்
புணர்வு மெனவே புகன்றனர் புலவர்.
2045 வந்திகை சுணங்கும் பூணுநா லணியும்.
2046 வந்தி வழிபாடென் றிடலு மலடியும்.
2047 வம்பு புதுமையுங் கச்சு மணமும்
நிலையின்மையு மிடரு நிகழ்த்த லாகும்.
2048 வம்பலர் புதியோரு மயலோரு மாகும்.
2049 வயம்புட் பொதுவும் வலியு நீரும்
இரும்பு வாசியுந் தகருமா மாகும்.
2050 வயலே வயலும் வெளியு மருதமும்.
2051 வயிறு கயிறு முதரமு மாகும்.
2052 வயிரஞ் சேகு முரணுங் கூர்மையும்
குலிசமுங் கோபமும் வயிர மணியும்.
2053 வயவன் வலியானும் வேட்டனும் வீரனும்.
2054 வயாவருத் தங்களும் கருப்பமு நோயும்
விருத்தமு மெனவே விளம்பினர் புலவர்.
2055 வயமாக் குதிரையும் யானையுஞ் சிங்கமும்
புலியு மெனவே புகல லாகும்.
2056 வயின் வியங்கோளு மேவல் கொளலும்
கடிமனையு முதரமு மிடமு மாகும்.
2057 வரிவா ரிதியும் வழியுஞ் சுணங்கும்
எழுத்தும் பாட்டு மிறையு நெல்லும்
கண்ணின் வரியு நிறமும் வடிவும்
நீளமும் வண்டுந் தீயு மொழுக்கமும்
சந்தித் தெருவுஞ் சாற்றினர் புலவர்.
2058 வரம்பு வட்டியு மெல்லும் வரம்பும்.
2059 வரையே மணஞ்செ யென்றலு மெழுதலும்
வேயு மட்டு மலையுங் கவரையும்
கரையு மெனவே கழறினர் புலவர்.
2060 வருட மழையு மாண்டு மாகும்.
2061 வரைத லெழுதல் நீங்கலுங் கொள்ளலும்.
2062 வருணம் வண்ணமும் குலமும் புனலும்.
2063 வரித்தல் பொறித்தலும் பூசுதலு மாகும்.
2064 வலம்வலப் பாலு மிடமுமோ ருருயும்
மேகமும் வேலும் வெற்றியு மாகும்.
2065 வல்லை விரைவுங் காடும் வன்மையும்
மதிலு நோயும் வழங்குவர் புலவர்.
2066 வல்சூதும் விரைவும் வலியுங் கச்சும்.
2067 வல்சி சூழு முணவு மாகும்.
2068 வலவன் றேர்ப்பாகனு மாயனும் வீரனும்.
2069 வல்லியம் புலியும் படருறு கொடியும்.
2070 வலவை வல்லோனும் வஞ்சம் பெண்ணும்
வேலனும் வெறியாட் டாளனும் விளம்புவர்.
2071 வலம்புரி சங்கு நந்தியா வர்த்தமும்
ஒருமர முமென வுரைத்தனர் புலவர்.
2072 வல்லியாய்ப் பாடியும் வல்லிக் கொடியும்
மலையு நிகளமு மாதரு மாகும்.
2073 வல்லிகை யாழுங் காதிற் பணியும்.
2074 வலித்தல் பேசலும் வளைத்தலு நினைத்தலும்.
2075 வழியே மரபு மிடமுந் தொடர்ச்சியும்
மார்க்கமுஞ் சேயும் மரமும் பின்னுமாம்.
2076 வழித்தோன் றல் மகனு மகளு மாகும்.
2077 வழுதலை புனத்தி விட்டபொய்க் கழுவும்
வழுதுணை யுமென வழங்கினர் புலவர்.
2078 வழங்கல் கொடையுஞ் சொல்லலு முலாவும்.

(பிரதி) [2] பண்ணும். [3] தாளமும் வட்டமு.

189159

அமிர்தசாகரம்
தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய
ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0
இஹம்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இஹம்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security — for the policyholder from an investment point of view. — for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.
For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)